உ
சிவமயம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில்வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

யாழ்ப்பாணம்:— விக்கிரம ௵ புரட்டாதி ௴ ௧௮௳ (1940 அக்டோபர் 3 வியாழக்கிழமை)

[இலக்கம்—௫0]

[புத்தகம்—௫௨]

சைவ வித்தியாவிருத்திச் சங்கம் தனக்கு விசேஷ சலுகையை நாடவில்லை

ஸ்ரீ இராசரத்தினம் அரசாங்கசபையில் வந்த குற்றச்சாட்டுகளை ஆராய்கின்றார்

குற்றஞ் சாட்டியோர்மேல் அக்குற்றங்கள் திருப்பி ஏற்றப்பட்டன

இந்த மாசம் 27-ந் திகதி வெள்ளிக்கிழமை வண்ணார்பண்ணை ஸ்ரீ வைத்தியலிங்கம் வித்தியாசாலை மண்டபத்தில் கிராம விருத்திச் சபையின் ஆதரவில் நடந்த பகிரங்கக் கூட்டமொன்றிலே தலைமை வகித்த சைவ வித்தியா விருத்திச் சங்கக் காரியதரிசி ஸ்ரீ சு. இராசரத்தினம் அவர்கள் அரசாங்கசபையில் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது அங்கத்தவர் சிலர் மேற்படி சங்கத்தின்மேலேற்றிய குற்றச் சாட்டுக்கு விடை கூறினார்கள்.

மேற்படி பகிரங்கக் கூட்டத்திலே பண்டிதர் T. குமாரசாமிப்பிள்ளை "சைவசமயமும் ஒழுக்கமும்" என்னும் விஷயத்தைப் பற்றிப் பாண்டித்தியம் நிறைந்த சொற்பொழிவாற்றி முத்திக்குச் சாதனமாகிய கல்வியின் சிறப்பை வற்புறுத்தினர்.

சபையோரின் ஆரவாரத்தின் மத்தியில் எழுந்த தலைவர் அவர்கள் இலங்கையில் ஒவ்வொரு சைவனும் பிரசாரகர் வற்புறுத்திய விஷயமொன்றை ஞாபகத்திற் கொண்டு அதன்படி ஒழுகல் தக்கதென்றும், ஒவ்வொரு சைவக் கிராமத்துக்கும் சொந்தக் கோவிலும் பாடசாலையும் வேண்டுமென்றும், தங்கள் பெரும் சைவ உத்தாரண புருடராகிய ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் போதித்துக் கடைப் பிடித்து ஒழுகி வந்த இலட்சியம் அதுவேயென்றும், சுவாமி விவேகானந்தராலும் அது வற்புறுத்தப் பட்டிருக்கிறதென்றும், இக்கால உலகத்தில் நன்கறியப்பட்ட தந்திரமாகிய பொய்யும் விஷமமும் நிறைந்த பிரசார முறையினாலே இகழப்படுதலும் வருத்தப் படுதலும் அவமதிப்புக்காளாதலும் ஒவ்வொரு உத்தாரண புருடனுக்கும் பெருங்காரிய சாதகனுக்கும் முன்னும் இன்றும் இன்னும் நிகழ்வதென்றும், நாவலர் அவர்களும் தாம் இரவு பகலாய் யாருக்குழைத்து வந்தார்களோ அந்தச் சொந்தச் சமயத்தவர்களாலே தம்மேற் பழி சுமத்தப்பட்டதென்று சொன்னார்களென்றும் கூறினார்கள். அவர்கள் மேலும் கூறியதாவது:

உட்பகையும் புறப்பகையும்

அவ்வாறே சைவவித்தியா விருத்திச் சங்கமும் அதன் வேலையாட்களும் எளிய சைவச் சமர்த்தர்களாலே பழி சுமத்தப்படுகின்றார்கள். இவர்களுக்குத் தங்கள் தங்கள் சொந்தக் கறுப்பிருக்கலாம். சிவனருளாலும் சிலர் செய்த கடும் வேலையாலும் தான் முடிந்துசென்ற 16 வருடங்களுக்குள்ளே சைவ வித்தியா விருத்திச் சங்கம் 16000 பிள்ளைகளை 500 ஆசிரியர்களால் 100 பாடசாலைகளிற் பயிற்றுவிக்கும் நிலையடைந்திருக்கிறது. சேர் P. இராமநாதன் மினிஸ்டர் பதவியிலிருந்து விலகும்போது 20000 ரூபா உதவி நன்கொடை பெற்ற சங்கம் இப்போது 3 லட்ச ரூபா பெறுகின்றது. தங்கள் கையிலிருந்து தங்கள் ஏகபோகவுரிமை நழுவுவதைக் கண்ட கிறிஸ்தவர்களுக்கு இது பெரும் திகிலாயிருக்கின்றது. கிறிஸ்த சமயத்தைப் பொருளாதாரத் தொடர்பில் நோக்கும் இவர்களுட் சிலர் குழப்பம் அடைவதும் இயல்பே. வஞ்சகம் இல்லாத சைவர்கள் பலர் சங்கத்துக்குப் பொருளும் ஊக்கமும் அளித்து வருகிறார்கள். ஆனால் கெட்டகாலம் சில சைவர்கள் பகையும் பொறாமையும் சுபாவமான துஷ்டத்தனமும் காரணமாகச் சங்கத்துக்கும் அதன் வேலையாட்களுக்கும் கரி பூசுகின்றார்கள். இவ்வுலகம் இருக்கும்வரையும் துஷ்டத்தனமும் இருக்குமென்றே காத்திருக்கவேண்டும். மிக நெருங்கிய தொடர்பும் பட்சமுமுள்ளவர்களே சில சமயம் எங்களுக்கு நெகிழ்கிறார்கள். தேகத்திலே வளர்ந்து செழிக்கும் வியாதி காலத்தோடு தடுக்கப்படாது விட்டால் அது தேகத்தைக் கொல்லும். சைவ வித்தியா விருத்திச்சங்கம் செய்த உதவியாலும் அளித்த பாதுகாப்பாலும் இப்போது செழித்திருக்கும் ஆசிரியர்கள் நால்வர் கொழும்புக்குப் பிரயாணமாகித் தாமே சங்கத்தைப்பற்றி ஒன்றும் நேரே யறியாத கனவான் ஒருவரைப் பிடித்தார்கள். அவர்கள் அவருக்குப் பொய்மொழிகள் கூறி, அவர் சென்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது சங்கத்துக் கெதிராக நான்கு குற்றச்சாட்டுகள் கொண்டுவரச் செய்தார்கள்.

மாற்றத்துக்குக் காரணங்கள் கேட்கப்படவில்லை

எனது அரசியற் பகைவரும் எங்கள் ஆசிரியர்களும் செய்யும் பொய்ப் பிரசாரங்களுக்கும் ஒரு எல்லை வேண்டும். காசு கொடுக்காத ஆசிரியர்களை நான் அடிக்கடி மாற்றியிருக்கிறேனென்று காணப்பட்டதென்று B. H. அலுவிகாரை சொல்லச் செய்யப்பட்டனர். 1937 இல் வித்தியாபகுதி வைத்த விசாரணையில், மிஸ்டர் அலுவிகாரையைச் சமீபத்தில் சந்தித்த ஆசிரியர்களுள் ஒருவராகிய மிஸ்டர் சுவாமிநாதன் காசு கொடுக்காமைக்காகத் தாம் மாற்றப்பட்டேன் என்றெவ்வாசிரியராயினும் தனக்குச் சொல்லவில்லையென்று கூறியிருக்கின்றார். இன்னும் சங்க நிர்வாக சபைக் கூட்டங்களிலே மாற்ற முறையைப்பற்றிக் கேள்விகள் எழுந்தனவேயன்றி மாற்ற நோக்கங்களைப்பற்றிக் கேள்விகள் எழவில்லை என்றும் கூறியிருக்கிறார். 1938 ஜனுவரியில் வித்தியாகர்த்தர் செய்த தீர்ப்பு அடிக்கடி மாற்றஞ் செய்தல் நான் பாடசாலைகளை நடாத்தச் சக்தியற்றவன் என்பதைக் காட்டுகிறதென்றும் அடிக்கடி மாற்றஞ் செய்வதால் பாடசாலை வேலை பாதிக்கப்படுகிறதென்றுமே கூறிற்று. 1938 ஜனுவரியில் நான் மானேசர் வேலையிலிருந்து விலகியமையால் நான் காசு கொடாமைக்காக ஆசிரியர்களை மாற்றினேனென்ற பேச்சு வர இடமில்லை.

மேற்செலவுகள்

இன்னும் எனது மோட்டார் மேற்செலவு முதலியவைகள் ஆசிரியர்கள் கொடுக்கும் பணத்திலிருந்து எடுக்கப்படுவதாக மிஸ்டர் அலுவிகாரை கூறச் செய்யப்பட்டார். நான் இதை ஒத்துக்கொண்டதாக மிஸ்டர் T. B. ஜயா பேசியபோது பிழைவிட்டதாகத் தெரிகிறது. இந்த விஷயம் அரசாங்கசபையிற் சடுதியாய் வந்தமையால் மிஸ்டர் ஜயா ஞாபகத்திலிருந்து பேசி இவ்வாறு பிழைவிட்டிருக்கலாம். 4000 ரூபா பெறும் எனது புதிய மோட்டாரைச் சங்கத் தேவைக்குபயோகிக்கக் கொடுத்தது போன்ற செயல்கள் இருக்கட்டும், எட்டுவருஷம் எனது கோட்டு வேலையை விட்டுச் சம்பளமின்றி வேலை செய்தேன். பின் ஒரு சிறிய தொகை எனது மேற்செலவாய் அங்கீகரிக்கப்பட்டது. ஆசிரியர்கள் கொடுக்கும் தொகையிலிருந்து இது எடுக்கப்படக்கூடாதென்றும் ஏனையோர் கொடுப்பதிலிருந்தே இது எடுக்கப்படவேண்டுமென்றும் சபைக்குத்தெளிவாய்த் தெரியும். எங்கள் அக்கிராசனர் சபைக்கு 4000 ரூபா கடனாகக் கொடுத்தார். இதனால் அந்நேரத்துக்கேனும் ஆசிரியர்கள் கொடுக்கும் பணத்திலிருந்து எனது மேற்செலவுக்காகச் சங்கம் பணமெடுக்காமல் நடந்துகொள்ளுதல் முற்றாய் முடியக்கூடியதாயிற்று. நான் மனேசர் பதவியிலிருந்து விலகியபின்னும் எனது மேற்செலவுப்பணம் ஆசிரியர் அல்லாதோர் கொடுக்கும் பணத்திலிருந்தே கொடுக்கப்படுகின்றது.

துவிபாஷா பாடசாலைகள்

மிஸ்டர் அலுவிகாரை கொண்டுவந்த மூன்றாவது விஷயம் துவிபாஷா பாடசாலைகளில் ஆங்கில உபாத்தியாயர்கள் பேரால் மனேச்சர் கொடுக்கும் பணத்தைப் பற்றியதாகும். ஆசிரியர்கள் சம்பளத்தில் மிகுதியை அரசாங்கம் கொடுக்க மானேசர்மார் தாம் பின்னாக

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

கம்பர்

(By Pandit M. Nallathamby)

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப் போற்
பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை உண்மை வெறும் புகழ்ச்சியில்லை"

என்றார் பாரதியார். அன்றியும் "கல்வியிற் பெரியர் கம்பர்" "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியுங் கவிபாடும்" என்னுந் தொடர்களுங் கம்பர் பெருமையைப் புலப்படுத்துவனவாகும்.

இவர் 12ம் நூற்றாண்டிலிருந்தவர். வைஷ்ணவ சமயத்தினர், சிறுவயது தொட்டே இவர் கல்வியிலும் பாவியற்றுதலிலும் மிக மேம்பாடுடையராய் விளங்கினர். இவரைச் சிறுவயது தொட்டு வளர்த்து ஆதரித்து வந்தவர், திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் என்பார். கம்பர் தாமியற்றிய இராமாயணம் என்னும் நூலிலே இந்த வள்ளலைப் பத்திடங்களில் வைத்துத் தனது நன்றியைப் புலப்படுத்தியிருக்கின்றார். கம்பர் தாமிறக்குந் தறுவாயிலுங் கூடச் சடையப்பவள்ளலை மறந்தாரில்லை. இதனை

"ஆன்பாலு நெய்யு மாம்பழமுமுக்கனியும்
தீம்பாய வுண்டு தெவிட்டுமனம்— விம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா மண்மேல்
இறக்கும் பொழுதேனு மினி."

எனக் கம்பர் இறுதியிற் கூறிய வெண்பா வலியுறுத்தும்.

இவர் சோழவரசனது சமஸ்தான வித்துவான்களுக்கே தலைசிறந்தவராய் விளங்கினர். ஒருநாட் சோழனும் இவரும் சோலையில் உலாவிக்கொண்டிருக்கையில் இருவருக்குமிடையே வாக்குவாதமுண்டாயிற்று. இதனாற் கம்பர், சோழனைவிட்டுப் பிரியவேண்டியவரானார். பிரியுங்காலத்து இவர்,—

"மன்னவனும் நீயோ வளநாடும் உனதோ
உன்னையறிந் தோதமிழை யோதினேன்— என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு"

என்னுஞ் செய்யுளைக் கூறிப்பிரிந்தனரென்ப.

இவ்வாறு பிரிந்து சோணாடு கடக்கச் செல்லுகையிற் பசிப்பிணி இவரை வாட்டிற்று. செட்டிகளிடஞ் சென்றார், அவர்கள் கவனிக்கவில்லை. எண்ணெயூற்றிக் கொண்டிருந்த ஒரு வாணியனிடம் போனார், அவனும் ஆதரித்தானில்லை. பின்பு பார்ப்பாரகம் புகுந்தனர். அவர்களோ ஏனென்றுங்கூடக் கேளாது துரத்தி விட்டனர். பின்னர் வயலில் உழுதுகொண்டு நின்ற வேளாளனொருவனை யண்டினர். அவன் மிக மனமுருகித் தனதுணவிற் பாகத்தை உவந்தளித்து இவர் பசியையாற்றினர். உடனே இவர்,

"செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசலிடைப் போகோமே—முட்டிபுகும்
பார்ப்பாரகத்தை யெட்டிப் பாரோமே யெந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்."

என்னுஞ் செய்யுளைக் கூறினர். இவர் தம வாழ்க்கையில், வேளாளர் தம் மாண்புகளை யெல்லாங் கண்டு மகிழ்ந்தவராதலின் "ஏரெழுபது" என்னும் ஓர் அழகிய நூலை இயற்றியிருக்கின்றார். அந்நூலிலிருந்து இரு செய்யுட்களை இங்கெடுத்துக் காட்டுவன்—

1. வேதநூன் முதலாக விலங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவா ரெல்லாரும் உழுவார்தங் குடைவளமுங் கொழுவலமே
ஆதலால் இவர் பெருமை ஆருரைக்க வல்லாரே.

தொடர்ச்சி 4ம் பக்கம்

பகைவர் கொழும்பைத் தாக்கினால்

ஜனங்கள் கையாள வேண்டிய பிரதான நடவடிக்கைகள்

விமானமுற்றுகைப் பாதுகாப்பு அதிகாரியின் உபதேசம்

பகைவர் கொழும்புநகரைத் தாக்கினால், பொதுஜனங்கள் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி விமான முற்றுகைப் பாதுகாப்பு அதிகாரி சனிக்கிழமை வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையிற் கூறப்பட்டிருப்பதாவது:-

கொழும்பு நகரைப் பகைவர் கீழ்க்காணும் மூன்று முறைகளில் தாக்க முடியும்.

(1) கப்பலில் வந்து கரையை நோக்கிப் பீரங்கிப் பிரயோகஞ் செய்தல்.

(2) ஆகாயத்திலிருந்து வெடிகுண்டுகளை வீசி அல்லது விஷப்புகையைப் பிரயோகித்துத் தாக்குதல்.

(3) சமுத்திரத்திற் சிறிது தூரத்திற்கப்பால் சத்துரு பிரமாண்டமான கப்பல்களைக் கொண்டுவந்து நிறுத்தி அவற்றிலிருந்து படகுகள் மூலம் துருப்புகளைக் கடற்கரையில் இறக்கி அத் துருப்புகளைக்கொண்டு தாக்குதல்.

இப்பொழுதுள்ள நிலைமையில் சத்துரு கொழு[illegible] விமான முற்றுகையிட முடியுமென்பது மிகவும் அசாத்தியமான காரியம்.

விமானத் தாக்குதலைப்பற்றி எச்சரிக்கை செய்ய மின்சார ஊதுகுழல்கள் சத்தமிடும்.

கொழும்பு வாசிகளிற் பெரும்பாலோர் தங்கள் வீடுகளில் தங்கியிருக்கும் இரவு நேரங்களில் சத்துரு கொழும்பைத் தாக்குகிறதாக வைத்துக்கொள்வோம். அப்படியானால், நமது துருப்புகள் பாதுகாப்புப் படையினர், விமான முற்றுகைப் பாதுகாப்புச் சேவையைச் சேர்ந்தவர்கள் பொலிஸார், நெருப்பணைக்கும் படையினர் மற்றும் அத்தியாவசியக சேவை புரிபவர்களைத் தவிர மற்றவர்கள் தங்கள் வீடுகளுக்குள்ளேயே தங்கியிருக்கவேண்டும். அந்நேரங்களில் ஜனங்கள் தெருக்களில் வந்து கூடுவதினால் பீரங்கிக் குண்டுகள், வெடிகுண்டுகள் முதலியன வெடிப்பதால் மிகுந்த உயிர்ச்சேதம் ஏற்படும்.

அன்றியும், பொலிஸார், நெருப்பணைக்கும் படையினர், விமான முற்றுகைப் பாதுகாப்புப்படையினர் போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்படும். தெருக்களில் ஜனக்கூட்டத்தைக் கண்டு சத்துரு விமானங்கள் வெடிகுண்டுகளை அதிகமாகப் பொழியக்கூடும். பாதுகாப்புப் படைகள் போக்குவரத்துக்கும் அதிக இடைஞ்சல் ஏற்படும்.

பகல்நேரம் தாக்கினால்...

பகல்நேரத்தில், ஜனங்கள் தங்கள் அலுவல்களின் நிமித்தம் நகரில் நடமாடிக்கொண்டிருக்குஞ் சமயம் சத்துரு தாக்கினால், அப்பொழுதும் ஜனங்கள் கூட்டம் போடுவது தடுக்கப்படவேண்டும். ஜனங்களிடையே அச்சம் ஏற்படாமலும் தடுக்கவேண்டும். அச்சமயம் வீதிகளிற் செல்லும் ஒவ்வொருவரும் சமீபத்திலுள்ள கட்டிடங்களுட் சென்று பதுங்கிக்கொள்ளவேண்டும், வாகனப் போக்குவரத்து நெருக்கடி ஏற்படாமலிருக்கும்பொருட்டு, ஜனங்கள் நகரைவிட்டு வெளியேற முயற்சிக்கக்கூடாது. ஆனால், அவர்கள் தங்கள் வீடுகளுக்குள் அமைதியுடன் தங்கியிருக்கவேண்டும். தங்கள் வீட்டைவிட்டு வெளியே சென்றிருப்பவர்களும் உடனே தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச்செல்ல முயற்சிக்கக்கூடாது. அவர்கள் சமீபத்திலுள்ள கட்டிடங்களுட் சென்று அங்கு தங்கியிருக்கவேண்டும்.

"வாகனங்களை நிறுத்துக"

மோட்டார்கள் மாட்டுவண்டிகள் முதலியவற்றை ஓட்டிச் செல்பவர்கள் விமான முற்றுகை எச்சரிக்கையைக் கேட்டவுடன் வண்டிகளை நடைபாதை ஓரத்தில நிறுத்திவிட்டு நெருப்பணைக்கும் யந்திரங்கள் "அம்புலன்ஸ்" கார்கள், துருப்புகள் முதலியன செல்வதற்குத தெருவின் மத்தியபகுதியைக் காலியாக விட்டுவிடவேண்டும்.

பிரதான விஷயங்கள்

இராநேரங்களில் விமான முற்றுகை எச்சரிக்கை ஊதப்பட்டவுடன் கீழ்க்காணும் விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும்.

1. எல்லா விளக்குகளையும் உடனே அணைத்துவிட வேண்டும்.

2. சமையலறையிலுள்ள நெருப்பையும் 'காஸ்' அடுப்புகளையும் அணைத்துவிடவேண்டும்.

3. கதவுகளுக்கும் ஜன்னல்களுக்கும் நேரே நில்லாமற் பலமான சுவர்களின் பக்கத்தில் ஒதுங்கிக் கொள்ளவேண்டும்.

4. நின்றுகொண்டிருக்காமல் தரைமீது படுத்துக்கொள்வது நல்லது.

5. ஜன்னல்கள் கதவுகள் திறந்த விறாந்தைகள் முதலியவற்றில் நிற்கவேண்டாம்.

6. நெருப்புப் பிடித்த வீட்டில் அகப்பட்டுக்கொண்டால் நீங்கள் நிற்கவேண்டாம். ஆயின், படுத்த வாக்கில் வாசலுக்கு நகர்ந்து செல்லவேண்டும்.

7. எல்லாவற்றையும் விடப் பிரதானமாக நீங்கள் அச்சங் கொள்ளக்கூடாது. நீங்கள் அமைதியுடனிருப்பது தவிர மற்றவர்களையும் அமைதியுடனிருக்கும்படி செய்யுங்கள்.

கொழும்பிற் கடைப் பிரமாணம்

நடத்துதற்கு நகரசபைக்கு அதிகாரம் வேண்டுமாம்

கொழும்பு நகரிற் கடைப்பிரமாண விதிகளை நடைமுறையில் நடத்தும் வேலையைக் கொழும்பு நகரசபைவசம் ஒப்புவிக்கும்படியும் அதற்காக அரசாங்கத்தார் நகரசபைக்குப் பணவுதவியளிக்கவேண்டுமென்றுங்கோரி ஒருபிரேரணையை டக்டர். வ. இரத்தினபாலா கொழும்பு நகரசபையின் அடுத்தகூட்டத்திற் கொண்டுவருவார்.

மூவர் கொலையில் முடிந்த கலகம்

மீன்பிடிகாரர்கள் கலகத்தின் விளைவு?

ஐந்துபேர் கைது செய்யப்பட்டனர்

அம்பலாங்கொடை செப், 29

நேற்றுக்காலை, பம்பலப் பிட்டியைச் சேர்ந்த மீன்பிடிப்பவர்களிடையில் மீன்பிடிக்க வலைகளை வீசுவது சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தபொழுது அவர்களிடையே ஒரு கலகம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

கலகத்துக்குப்பின் ஒரு அடிதடிச் சண்டை ஏற்பட்டதன் பலனாக மீன்பிடிப்பவர்களில் இருவர் ஸ்தலத்திற் கொல்லப்பட்டனர். மற்றுமொருவர் ஆஸ்பத்திரியில் மரணமானார். மற்றுமொருவருக்கு மோசமான காயங்களேற்பட்டன.

இச்சம்பவத்தையொட்டி ஐந்துபேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

பலப்பிட்டிப் பொலிஸ் நீதிபதி ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினார்.

செந்தமிழின் சிறப்பு

சச்சிதாநந்தம் அவர்கள்

பாரதநாட்டில் பாடைகள் பதினெட்டே என்று பண்டைப் பரதகண்டச் சாத்திரங்களில் கூறப்படுகிறது. இன்றோ எத்தனையோ பாடைகள் காணப்படுகின்றன. 1941-ம் ஆண்டுவரைக்கும் வழங்கப்பட்ட பாடைகள் 3500 என்று கணக்கிடப் பெற்றிருக்கின்றது. இன்னும் எத்தனை பாடைகள் தோன்றுமோ!

பதினெட்டுப் பாடைகளினும் சிறப்பு வாய்ந்தன தமிழும், ஆரியமுமேயாகும். ஆரியமும், தமிழுமே ஆதியில் இறைவனால் உண்டாக்கப்பட்ட பாடைகள்.

இதைத் திருப்புகழாசிரியரும்,

"இனிதான, முத்தமிழையாயும்" வரிசைக்கார" —(சத்தமிகு)

"செஞ்சுடர்வேல் வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை" (அலங்காரம்—சேந்தனை)

"செந்தமிழ் நூலோன் குமரன் —(வகுப்பு—தாணியில்)

"ஆரியமும் தமிழும் உடனே சொலிக் காரிகை யார்க்குங் கருணை செய்தானே" (—திருமந்திரம்)

"அமிழ்கின்ற வாறும் அதுகட்டு மாறும், சிமிட்டலை பட்டுயிர் போகின்ற வாறும், தமிழ்ச்சொல் வடசொல் எனுமிவ் விரண்டும், உணர்த்தும் அவனை யுணரலு மாமே"— (திருமந்திரம்)

எனவும் கூறியிருத்தல் காண்க.

இவையுணராதார் தமிழ் பொதிய முனிவரால் உண்டாக்கப்பட்டதென்று கூறுகின்றனர். அகஸ்தியர் தமிழைப் பூவுலகத்திற் பரவச் செய்தலையன்றித் தண்டமிழை யுண்டாக்கினவரல்லர். இக்கருத்தமைந்த தொல்காப்பியப் பாயிர முகத்தில்,

"ஆதியிற் றமிழ்நூல் அகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ் ஞான கலம்பெறற் பொருட்டே"

என்னும் திருவாக்கா லுணர்க.

கத்தெய்வச் செந்தமிழ் தென்மொழியெனவும், ஆரியம் வடமொழியெனவும் கூறப்படுகிறது. வடமொழி சத்திபிச மன்னிய மந்திர செபத்திற்கும், பிற மந்திரங்கட்கும், உத்தர கிரியைக்கும் முக்கிய உதவியாகும்; தனிமயிலேறும் வள்ளிநேசனது காதலைத் திருச்செவி திருவுள்ளங்களை இனிதுமகிழ்விக்குமாறு இன்னோசையும் உருக்கமாகப் பாடும் சுபப்பிற்குத் தமிழே உரியதாகும். படைத்தளித் தழிக்கும் மூவர்க்கும் முதல்வனும் முருகப் பெருமானை தமிழுக்கு அதிதேவதையாகும்.

"செந்தில்வாழ் செந்தமிழ்ப் பெருமாளே" —(சீருபால்)

"மணிநாடக வெயில் வீசிய அழகா தமிழ்ப்பெருமாளே"— (மதனைவிய)

"குமர முத்தமிழோனே"—(பரிவ)

"வானவர்கான் வானவர்க்கு மேலானான் காண்
வடமொழியும் தென்றமிழுமறைகள் நான்கும்
ஆனவன் காண்"—
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்"
"முத்தமிழும் நான்மறையுமானான் கண்டாய்"

என்னும் திருப்புகழ், தேவாரம் வலியுறுத்துகின்றன.

அப்பரமேஸ்வரன் செந்தமிழின்பேல் அதிக பிரியமுடையவர். தண்டமிழைப் பாடுவோர்க் கெளியவர். புகலியர்தான் தமிழ்ப்பாடல் உகந்து கேட்டருளுகின்றனர்.

"தண்டமிழின் மிகுநேய—முருகேச" (—அண்டர்பதி)

"எத்திடார்க் கரிய முத்த பாத் தமிழ்க்கோ எத்திஞர்க்கெளிய—பெருமாளே" —(தொச்சுறு)

"நறநற்பாவை நாட்பணி—கருணைய தமிழிற் பாடல் கேட்டருள் — பெருமாளே"— (அனிருப)

எனுந் திருவாக்கால் அறிக.

இவ்வரிய தமிழின் பெருமையை யாரே கூறவல்லார்! பற்பல பாடைகள் தோன்றி அழிந்தநாளும் தமிழ்மொழியின் வளர்ச்சி வலிகுன்றச் செய்கின்றது. ஆங்கிலம் பதினறுகோடி மக்களாற் பேசப்படுகிறது. நமது செந்தமிழோ ஏறக்குறைய ஒன்றரைக்கோடி மக்களால்தான் பேசப்படுகின்றது. இங்ஙனம் இந்த நிலையில் தமிழைக் கொண்டுவந்து விட்டோம். இதைக் காட்டிலும் நற்றமிழ் நாட்டிற்கு வேறென்ன இழிவு வேண்டும்?

அந்தோ! இக்கிலையில் வடநாட்டார்கள் செந்தமிழ் நாட்டகத்து இந்திபாடையை விருத்திசெய்ய வேண்டுமெனத் துணிந்து வந்திருக்கின்றனர். தமிழின் பெருமையை யறியாமல் இந்தி மொழியைத் தென் தமிழ் நாட்டில் பரவச்செய்ய விழைபு வடநாடாது சுயநலத்தினை யாதரிக்கும் தமிழ் மக்களும் முன்வந்து நின்றனர். இச்வேதுயைக் [illegible] நடாத்தியவர் கூட்டமே அதிகம். மற்றை பௌத்தர், முகம்மதியர் முதலிய கூட்டங்களெல்லாம் கிறிஸ்தவர் கூட்டத்தில் குறைந்ததே. இக்கூட்டத்திலுங் குறைந்தது சைவமதக் கூட்டம். என் கிறிஸ்தமதம் மட்டும் யாண்டும் பரவுகிறதென்றால் ஆங்கிலமொழி விருத்தியாலேயேயாகும். ஆங்கிலமொழிச் சொற்கள் கி. பி. 1657ல் ௧௬,000 மொழிகள். இன்றோ ௪,௫0000 சொற்களுக்குமேல் அச்சிடப்பட்டிருக்கின்றன. சைவர்கள் ஆங்கிலபாடையைப் பயின்று கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துவிடுகின்றனர். ஆதலால் கிறிஸ்தவமதம் கூடி வருதலையும் நம் சைவமதம் குறைந்து வருதலையும் காண்கின்றோம். இத்தகைய நிலையில் இந்தி பாடையும் நந்தமிழ்நாட்டில் எங்ஙனம் பரவுமேயாகில் இன்னும் சைவமதங் குன்றித் தமிழ் பேசுமாந்தர்கள் குறைந்தேவிடுவார்கள் என்பது நிச்சயம். இவையாராயாமல் வடநாடாரது கொள்கையைப் பூர்த்திசெய்யத் தமிழ் மக்களாகிய பேதைச் சைவர்கள் பெருமுயற்சியெடுத்திருக்கின்றனர். தமிழன்னையின் வயிற்றிற் பிறந்து தாய்மொழியாகிய தமிழ்மொழியை யாதரிக்காமல் தோன்றி மறைகின்ற பிறமொழியை யாதரிப்பது பெரும் பேதைமையேயாகும். இவரா தமிழ் மக்கள் கடமை? இவர்களா தமிழன்னையின் மக்கள்? பெற்ற தாய்க்கு விழுமம் விளைவிக்கலாமா? நஞ்செந்தமிழ் நாட்டிற்கு இழிவைத் தேடலாமா? நடமாட்டுக் கருணைதனை மறந்திவ

"வெஞ்சன வலவமாற்றார் நூலைத்
தொடமாட்டே னவருரைக்கு முறைநகேளே
னவியாய தொடக்கார் கோட்குட்
படமாட்டே னருள்சார்ந்து சிறுவவொரு
மொழிப்பயனிற் படருநோக்கம்
விடமாட்டே னினிதினிதென்
குகப்பிரமமென விளக்கெம்மானே
—(திருப்பா)

என்னும் ஆன்றோர் திருவாக்கைச் சிந்திக்க வேண்டாமா? கம்பெரியோராகிய அருணகிரிநாதர், தாயுமானார், இராமலிங்கர், கபீரர், நாயன்மார்கள் முதலிய ஆன்றோர்கள் தமிழையே மிக மிகச் சிறப்பித்துப் பாடினர். தெய்வத் திருப்புகழில்,

"அடிமைசொலினுஞ் சொற்றமிழ்ப் பனிபாடு—பரிமள மிகுந்த, கடப்ப மாலையும்— அணிவோனே"—
(பலசா)

தொடர்ச்சி 3-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விக்கிரம ஹு
புரட்டாசி மீ ௧௮உ வியாழக்கிழமை

ஸ்ரீமான் இராசரத்தின மவர்கள் சொல்லிய சமாதானம்

இற்றைக்குச் சில வாரங்கட்கு முன் இலங்கை அரசாங்கசபைக் கூட்டத்தில், அடுத்தாண்டிற்காகிய பரிபாலனச் செலவுத் திட்டத்தை யிட்டு மேற்படி கூட்டத்தினர் பேசிய போது, சைவ வித்தியா விருத்திச் சங்கத்தைப் பற்றியும் அச் சங்கத்தைச் சென்ற பதினறு வருட காலமாக நிர்வகித்து நடத்துபவராகிய திரு. இராசரத்தினமவர்களைப் பற்றியும் பேச நேர்ந்தது; அங்ஙனம் பேசியபோது சிங்கள அங்கத்தவரொருவரும் எங்கள் தமிழ்ப் பிரதிநிதிகள் இருவரும், விஷயம் விளங்காமையினலோ, இல்லையேற் கோண்மொழி கேட்டோ, இன்றேற் குரோதங் காரணமாகவோ, யாமறியேம், குறித்த சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் மீதும் அதன் பொருட்டுத் திரிகரணமும் ஒருவழிப்பட உழைத்தவரும் திரு. இராசரத்தினத்தின்மீதும் பல அபராதங்களைச் சுமத்திப் பேசிவிட்டனர். அவர்கள் செய்த அச் செயல் உண்மையான சைவாபிமான முடையவரெல்லார்க்கும் ஆருத்துயரை ஆக்கும் இயல்புடையதாம்.

இந்த வித்தியா விருத்திச் சங்கம் சைவசமய விருத்தியின் பொருட்டும் செந்தமிழ் மொழியின் பொருட்டும் அது உற்பத்தியான நாள்தொட்டு இற்றைவரையிற் செய்துவரும் நன்மைகளை உலகம் நன்கு அறியும்; சைவ சமயத்திற்கு விரோதிகளான அந்நிய சமயவாதிகளும் நன்கறிவர்; இவைகளைத் — திரு. இராசரத்தினமாக, இச்சங்கத்தில் அங்கத்தவம் வகித்துள்ள ஏனைய அங்கத்தவர்களாக, எடுத்துச்சொல்லாவிடினும் இங்குள்ளாரெல்லாருமறிவர். இப்படியெல்லாமிருப்பவும் இந்தத் தூய சைவத் திருத்தொண்டிற்கு மாறுகக் கருமஞ் செய்வதென்றால், இதன் விருத்தியைக் கெடுக்க முயல்வதென்றால், இதுபோன்ற சிவத்துரோகம் தாய்மொழித் துரோகம் பிறிதில்லையெனலாம். இனி இப்படிக் குறை கூறுபவர்களும் பிரதிகூலமான செயல்களைச் செய்பவர்களும், தாங்களும் சைவசமய விருத்தி செந்தமிழ் விருத்தியென்னுமிவற்றின் பொருட்டு உழைப்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். இருபாலாரும் ஒரே நோக்கமுடையவர்களாக விருப்பரேல் இப்படியான குரோதம் வருதற்கு ஏதுயாதுமில்லையே! இவர்கள் தாங்கள் செய்யத் தலைப்பட்ட சற்கருமத்தைச் செய்க, திரு. இராசரத்தினமவர்களும் மேற்படி சங்கத்தாரும் உண்மையான சைவாபிமானிகளும் செந்தமிழபிமானிகளும் தாங்கள் எடுத்துக்கொண்ட நல்ல கருமத்தைச் செய்க. சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற்கு மாறுக நிற்போர்க்கு நாம சொல்லத்தக்க தொன்றுண்டு. திரு. இராசரத்தினமவர்களிடம் ஏதும் தவறிருந்தால், அத்தவறு மேலான கருமத்தைச் செய்வோரிடத்தில் அபுத்திபூர்வமாக வருந்தவறுயிருக்கலாமென்றும், அத்தவறு மாறுபேசுபவர்களாகிய தங்களிடத்திலும் நேருதல் கூடுமென்றும் எண்ணிக்கொள்ளுதல் வேண்டும். இத்த மாறுளேரென மதிக்கப்படுபவர்கள் சைவவித்தியாவிருத்திச் சங்கத்திற்கு எவ்வகையான உதவியுஞ் செய்யவேண்டா. "பிச்சை வேண்டாம் நாயே, நாயைப்பிடி" என்ற விதமாக, எவ்வகையான இடையூறுஞ் செய்யாமலிருத்தால் அவ்வளவும்போதும்.

இனி, திரு. இராசரத்தினமவர்கள்மீதும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் மீதும் எதிரிகள் சுமத்திய ஆட்சேபத்திற்கு, நடுவுநிலைமையோடு கூடிய எவரும் ஒப்புக்கொள்ளத்தக்க சமாதானத்தை அவரே தக்க ஆதாரத்தோடு குறித்த பிரசாரணத்தில் எடுத்துச் சொல்லியிருக்கின்றார். ஆனல் அத்தச் சமாதானம் மற்றைக் கட்சியார் செவிக்கேனுங் கண்ணுக்கேனுஞ் சமாதானமாகுமோ என்பது சந்தேகம். ஏன்? நித்திரையாகக் கிடப்பவனை எழுப்புதல் முடியுமேயல்லாமல் நித்திரைபோற் கிடப்பவனை எழுப்புதல் முடியாதல்லவா? இது கிடக்க, இங்கே ஒன்றை மாத்திரம் எடுத்துக்காட்ட விரும்புகிறேம். திரு. இராசரத்தினமவர்கள் ஏதோ உபாத்தியாயர்களிடத்திற் பணம் பெற்றார் என அவருடைய எதிரிகள் சாதிக்கக் காண்கின்றேம். அவர் தாம் ஏதும் பணம் வாங்கியிருந்தால் அந்தப் பணத்திற்கு, அதனை உதவிய ஆசிரியர்கட்குப் பற்றுச்சீட்டை உடனுக்குடன் உதவி, பின் வருடாந்தப் பகிரங்கக்கூட்டத்திலும் கணக்குப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கின்றாரே; இப்படியான பொதுக் கருமங்களில் ஈடுபட்டுழைக்கும் சிலர் இங்ஙனஞ் செய்யக் காணேமே. வாங்கும் பணத்தை திரு. இராசரத்தினமவர்கள் மேற்படி தொண்டின்பொருட்டுச் செலவிடுவதன்றித் தம் குடும்பத்தின் பொருட்டுச் செலவிடுகிறாரெனச் சொல்ல ஏதுங் காண்கிலோமே! மோட்டாரதச் செலவிற்குப் பணம் பெறுகிறார் என்றால், அந்த மோட்டாரதத்தைத் தம்முடைய உத்தியோகத்தானத்திலிருந்து நீதித்தலத்திற்கு நியாயவாதியாகக் கருமம் பார்ப்பதற்கு உபயோகிக்கின்றாரா? இல்லையே; "காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண் ஆய்தல் அறிவுடையார்க் கண்ணதாம்" என்பதை எவரும் ஞாபகத்தில் வைத்தல் நன்று.

திரு. இராசரத்தினமவர்கள் அவர்கள் கூற்றைப் பொருட்படுத்தி அதனல் ஊக்கங் குறையுமியல்பின ரல்லரென நினைக்கின்றேம். "திரைய வித்து நீராடல் ஆகா, உரைப்பார் உரை அவித்து யாதுஞ் செயலில்லை." பொதுக்கருமங்களைச் செய்பவர்கள் பலரால் போற்றப்படுதலுஞ் சிலரால் தூற்றப்படுதலுஞ் சகசம். அங்ஙனம் தூற்றுபவர்களினுஞ் சமரே பலராவர். "உடன் பிறந்தார் சுற்றத்தாரென்றிருக்கவேண்டா, உடன் பிறந்தே கொல்லும்வியாதி"; சைவ சன்மார்க்கத்தின் பொருட்டும் தமிழ்மொழியின் பொருட்டும் நாவலப்பெரியார்போல் உழைத்தவர் முன்னுமில்லைப் பின்னுமில்லை யென்று உலகம் இப்பொழுதும் அப்பெரியாரைப் பாராட்டுகின்றது. அப்படிப்பட்ட அந்த மகானைத்தானும் நம்மவர் சும்மா விட்டாரா? அவரை நிந்தித்தார்கள், [illegible] கள், மரியாதைகெடுக்க முயன்றார்கள், இந்தியாவிலே கொல்லவும் முயன்றார்கள் என்று சொல்லப்படுகின்றது. மாறுபட்டார் செய்த இப்படியான முயற்சிகளினல் அப்பெருந்தகையாருடைய ஊக்கமுந் தொண்டும் அதிகப்பட்டனவேயொழியக் குறைந்தபாடில்லை. "சாமைக்காட்டிலும் படித்தவர்கள் சமயாபிமானமுள்ளவர்கள், திறமைவாய்ந்தவர்கள் தோன்றி [illegible] சைவசமயத்தின்பொருட்டும் தமிழின்பொருட்டும் உழைத்தல்கூடும்; ஆனல், உங்களுடைய நிந்தையையும் அவமதிப்பையுஞ் சமாதானமாகப் பெறுதக்கொண்டு கட்டைப்போற் சைவசமயத்தின்பொருட்டு உழைப்பதற்கு யாரும் வருவரோ என்பதையிட்டுத்தான் அஞ்சுகின்றேன்" என்னும் கருத்துப்பட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தாம் செய்த பிரசங்கத்திற் சொல்லியிருக்கின்றார். ஆனதால் அப்படியான தொண்டினையிப்பொழுது செய்ய முற்பட்ட திரு. இராசரத்தினமவர்கள் இதனையிட்டு ஊக்கங் குன்றப்பெறுவாரல்லர். தங்குறை நோக்காது பிறர் குறை நோக்குவர் எங்கும் பலருளர். அப்படியான இயல்புடையவர்களேயே இவ்வித அசுத்தங்கள் நேருகின்றன. ஒருசிலர் இப்படியான சத்கருமங்களிற்கு இடையூறாக நிற்பினும் உண்மையான சைவாபிமானிகள் இந்த மேலான முயற்சியில் தோன்றாத் துணையாகவும் தோன்றுந் துணையாகவும் நின்று கடனுற்றுவரென்பது நிசம்.

சப்பிறீங்கோடு

நெடுந்தீவுக் கொலை வழக்கு

1ம் எதிரிக்கு 8வருஷமும் 2ம் எதிரிக்கு 1 வருஷமும் கடுழியம்

1-10-40

யாழ்ப்பாணம் நெடுந்தீவில் வசிக்கும் செபஸ்தியான்-பிலிப்பும் தொமாஸ்-மரியானுமாக அவ்வூர் சவரினென்-மரியானைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டிய வழக்குச் சுப்பிறீம் கோட்டில் இரண்டாம் முறையாக விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கின் சாராம்சமாவது:— இச்சம்பவம் நடப்பதற்குச் சில நாட்களுக்கு முன்னர் முதலாம் எதிரி இறந்தவனின் சகோதரன் முறையானவன் வீட்டிற்குச்சென்றிருக்கிறான். இறந்தவனும் அங்கு சென்றிருக்கிறான். அங்கே வயதான ஓர் இளம் பெண் மாத்திரம் இருந்தாள். அவளுடைய தகப்பனர் அங்கிருக்கவில்லை. வேறுயாருமில்லாதவிடத்தில் முதலாம் எதிரி மாத்திரம் தனிமையில் அவன் அவ்வீட்டிற்கு நாள் வருவதை இறந்தவன் தடுத்தான். இதன் பின்னர்ச்சென்ற 1940ம் ஆண்டு மார்ச்சீ 31ந்தேதி முற்பகல் இறந்தவனும் வேறு மூவருமாகச் செபஸ்ரியான் கோவிலுக்குச் சென்று வீடுதிரும்பி வருகையில் எதிரிகள் இருவரும் ஓர் ஒழுங்கையிலுள்ள முடக்கில் இறந்தவனையும் மற்றவர்களையும் சந்தித்தனர். எதிரிகள் இருவரும் சகோதரர்கள். இவர்களுடைய தகப்பன் இரண்டு பெண்களை விவாகஞ் செய்தவர். முதலாம் எதிரி ஒரு பெண்ணுக்கும் இரண்டாம்எதிரி மற்றப்பெண்ணுக்கும் பிறந்தவர்கள். இரண்டாம் எதிரி இறந்தவனைக் கண்டதும் அவனைக் கட்டிப்பிடிக்க முதலாம் எதிரி ஒரு கத்தியால் முதுகில் குத்தினன். பின்னர் இரண்டாம் எதிரியும் இறந்தவனும் நிலத்தில் விழுந்தனர். முதலாம் எதிரி திரும்பவும் ஒருதரம் இறந்தவனுக்கு முதுகிலேகுத்தினன். எதிரிகள் அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டனர். இறந்தவன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான். பின்னர் அவன் ஆஸ்பத்திரியில் இறந்து விட்டான்.

விசாரணையின் பின் ஜூரிமார் ஏகமனதாக முதலாம் எதிரி [illegible] பாடாய்க் கொலைசெய்த குற்றச்சாட்டிற்குக் குற்றவாளியென்றும் இரண்டாம் எதிரி சாதாரணகாயம் வருவித்த குற்றச்சாட்டிற்குக் குற்றவாளியென்றும் அபிப்பிராயந் தெரிவித்தனர். நீதிபதி முதலாம் எதிரிக்கு 8 வருடக் கடூழியச் சிறைத்தண்டனையும் இரண்டாம் எதிரிக்கு 1 வருடக் கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்தார்.

கடிதம்

கேட்பாரில்லையா?

பத்திராசிரியருக்கு,

ஐயா,

யாழ்ப்பாணத்திலுள்ள இரண்டு வாக்கிய பஞ்சாங்கங்களும், திருக்கணிதப்பஞ்சாங்கமும், தென்னிந்தியாவிலுள்ள எல்லாப் பஞ்சாங்கங்களும் இந்த மாசத்தில் நிகழ்வதாகிய நவராத்திரிக் கும்பதாபனமும் பூசை ஆரம்பமும் நேற்று (புதன்கிழமை) என்று குறித்திருக்க, தென்னிந்தியாவிலும் இந்த இலங்கையிலும் உள்ள சைவாலயங்கள் எல்லாவற்றிலும் நேற்றைத் தினமே கும்பதாபனமும் நவராத்திரிப் பூசாரம்பமும் சொன்னபடி நடைபெற, புராதன பிரதான சிவாலயமாகிய வண்ணைப்பண்ணைச் சிவன் கோயிலில் மாத்திரம், அங்குள்ள அர்ச்சகர் முதலானோர் (செவ்வாய்க்கிழமை) முழுஅமாவாசைத் தினத்தில், பகல்கும்பஸ்தாபனஞ் செய்து மாலைக்காலத்தில் நவராத்திரிப் பூசை நடத்துகின்றார். அந்த ஆகமம் [illegible] செய்வது சரியா? இல்லையேல் பஞ்சாங்கங்களிற் குறிக்கப்பட்டிருப்பதுபோல இந்திய இலங்கையிலுள்ள சைவாலயங்களிற் கொண்டாடப்படுவதும் சரியா? குறித்த ஆலய மனேஜருக்கு அப்படிச் செய்வதற்கு யாதும் ஆதாரமுண்டா? இன்றேற் கொடிதம் பேதையுங் கொண்டாடவிடா என்ற முறையில் அப்பிராமணோத்தமர் நிற்கின்றாரா? மேற்படி சிவன் கோவில் முதலாளி சுகவீனமாகக் கிடக்கின்றாரானதால் தம்மைக்கேட்பவர் யாரென்ற அணி[illegible]

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

அங்கும் இங்கும்

நகரசஞ்சாரி

காலு சதம் போதுமா?

வித்தியாசாலைகளில் கல்வி பயிலும் வறிய பிள்ளைகளின் மத்தியான இலவச போசனத்திற்காக 15 லட்சம் ரூபா ஒதுக்கி வைப்பதற்கு நமது கருணை அரசாங்கத்தார் திருவுளம் இரங்கியிருக்கின்றனர். பட்டினப்பகுதிகளில் உள்ள இலவச போசனப் பாடசாலைகளுக்குப் பிள்ளை ஒன்றுக்கு நாலு சதவீதமும் கிராமப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்குப் பிள்ளை ஒன்றுக்கு 3 சத வீதமுமாக அரசாங்கத்தார் பண உதவி செய்வார் என்று தெரிகிறது. இந்த வித்தியாசாலைகளில் 6 வயது தொடக்கம் 18 20 வயது வரையிலுள்ள பிள்ளைகள் கல்வி பயிலுகிறார்கள். 15 வயதுள்ள ஓர் பிள்ளைக்குத் திருப்தியான உணவு, அதாவது அவனை எதிர்காலத்தில் ஓர் ஆண் மகனாக வர உதவி செய்யக்கூடிய உணவு மூன்று அல்லது நாலு சதத்துடன் ஆகமுடியுமா என்று அதிகாரிகளைக் கேட்கிறேன். இது என்ன விந்தை! ஒருநேர உணவுக்கு 3 அல்லது நாலுசதம் போதுமென்பது இந்த அதிகாரிகளது, அரசாங்கசபையாரதும் எண்ணமா? அப்படியானல் இவர்கள் ஏன் தமக்குமாத்திரம் மாதந்தோறும், ஆயிரக்கணக்கில் வேதனம் பெறுகின்றார்கள்? அவர்கள் நிருட்டிக்கும் திட்டத்தின்படி ஒரு குடும்பத்தின் சீவியச்செலவு மாதம் 5 ரூபாவுக்கு மேற்படமாட்டாதே. ஒரு சமையம், தங்களுடைய சாப்பாட்டுச் செலவு ஒருவிதம், ஏழைகளின் சாப்பாட்டுச் செலவு ஒருவிதம் என எண்ணுகின்றார்கள்! ஏழைகள் வரிப்பணமாயிருக்கும் பணத்தில் இருந்து ஆயிரக்கணக்கில் வேதனம் பெறும் மந்திரிசபையினரும், அரசாங்கசபையங்கத்தவரும், உத்தியோகத்தர்களும், இந்தத் திட்டத்தை ஒழுங்குக்குக் கொண்டுவரமுன், நேரம் நாலு சதத்துடன் தாம் ஒவ்வொருவரும் உணவருந்தி உயிர்வாழ முடியுமோ என்பதைத் தம் அனுபவத்திலேயே பரீட்சித்துப் பார்ப்பார் [illegible] இது என்ன காலத்தின் கோலமோ. ஆயிரக்கணக்கிற் சம்பளம் கொடுக்கும் [illegible] வறுமைக்குடியானவனுடைய பிள்ளைக்கு [illegible] போதாத நாலுசதம்! அவ்வெசமானின் [illegible] டாபிக்சசெலவுக்கு மாதந்தோறும் வேதனம் ஆயிரக்கணக்கில்!

கோள்கை என்ன?

நமது வரிப்பணப்போர் சங்கம்— இல்லை; அதன் ஏஜெண்டுகள்— தனது நகரசங்கத் தேர்தற் போட்டியில் [illegible] வேண்டியைய ஆகவிருக்கவில்லை, இதன் அடிப்படையான நோக்கம் என்ன? முனிசிபாலிற்றி வாயில் தடுப்பதா? அப்படியானல், 3ம் வட்டாரத்தில் நிற்கும் [illegible] பிரதிநிதியாயுள்ள ஸ்ரீமாக V.A. துரையப்பா முனிசிபாலிற்றி வருவதில் வேட்டு [illegible] பெரும் ஆதரவும் அவருக்கு இச் சங்கத்தின் ஆதரவித்து வைத்து அவருக்குப் பூரணமான உதவியையும் ஒத்துழைப்பையும் கொடுத்தவர்கள், இன்னும், 4ம் வட்டாரப் பிரதிநிதியாக உள்ள ஸ்ரீயான [illegible] இச் சங்கத்தினர் [illegible] ஒருவர் அல்லவா? [illegible] ஸ்தாபித்தவர் யாவர்? அதற்குப் பணவுதவி முதலாம் ஏனைய உதவிகளைச் செய்தவர்கள் யாவர் என்னும் இன்னொன்னை வற்றை, இப்போது அச்சங்கத்துப் பதவிகளைத் தழுவிக்கொண்டிருப்பவர்கள் பரிசீலிக்கக் கடமைப்பட்டவர்கள். தற்போது [illegible] சங்கம் அகப்பட்டுவருவதைத் [illegible] இப்பதவிகளில் [illegible] இப்போது [illegible] உள்ளும் [illegible] ஒருசிலர் இன்னும் இச்சங்கத்தில் உளர், இவர்கள் [illegible] இச் சங்கத்தைச் செவ்வனே நடாத்துவார்களாக. தேர்தற்பூசலில் இச்சங்கத்தை அகப்படுத்தாது நிருபயோகமாக [illegible] அவர்களுக்குச் சமாபதிக்கும் வேண்டுகோளாகும்.

பொருள்விலை அதிகரிப்பு

ஐரோப்பாவில் யுத்தத் தீ பரவுவதைச் சாக்காக வைத்துக்கொண்டு, இங்குள்ள அரிசி, வெஞ்சனப் பொருள் வியாபாரிகள் அவற்றின் விலையைக் கண்டபடி மனம்போனவாறு உயர்த்தி வருகிறார்கள். அரிசி நெல் என்பவற்றின் விலை இப்போது சிலகாலத்திற்கிடையில் பன்மடங்காக உயர்ந்து வந்திருக்கிறது. உணவு விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் இச்சமயத்தில் என்ன செய்கிறார்கள் என்று விளங்கவில்லை. வர்த்தகர்களாயுள்ளவர்கள் ஏழைச் சனங்களிடம் இருந்து கண்டபடி ஆதாயம் பெற்ற பின்னர்த் தானு, இந்த அதிகாரிகள் கண் விழித்துக் கருமம் ஆற்றுவார்கள்? பேராசைச் சட்டுக்களைக் கொண்டு, பொதுமக்களின்மீது அதிக விலை வைத்து விற்கும் வர்த்தகர்களை அடக்கிப் பொதுமக்களை ஆதரிப்பது அரசாங்கத்தாரின் தற்போதைய அத்தியாவசியக் கடமையாகும்.

"நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்"

சோவியத் ருஷ்யாவிலே ஒகப்பு என்றும், நாஜி ஜெர்மனியிலே கெஸ்டப்போ என்றும் பெயருடைய இரு இரகசிய பொலிஸ் ஸ்தாபனங்கள் உள. ருஷ்யப் பொதுவுடைமைக்கு மாறுனவர்களையும், நாஜிக் கொள்கைக்கு மாறுனவர்களையும் ஆண்டில் போட்டுப் பிடித்து வருத்துவதே இந்த ஸ்தாபனங்களின் நோக்கம். இப்படியான ஓர் இரகசிய ஸ்தாபனம் இந்த யாழ்ப்பாணத்திலும் இப்போது சிலகாலமாகக் கருமம் ஆற்றி வருவதை அநேகர் அறியாதிருப்பர். பொருமை, கயவலம், பதவிவேட்டை, என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்த இரகசிய ஸ்தாபனம் தனது நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்காகச் சைவாபிமானிகளுக்கும், சைவக் கல்வி விருத்திக்கும் எதிராக அக்கிரமம் ஆற்றி வருகிறது; மனக்குறை கொண்டுள்ள ஆசிரியர்களை இதன் குசுகுசு ஸ்தானமே தேடிப்பிடிக்கிறது. அவர்களுக்கு ஆசை வார்த்தை கூறி வலைக்குள் அகப்படுத்தி அவர்கள் மூலமாகக் கேள்விச் செவியர்களாம் சில அதிகாரிகளின் உதவியினால், [illegible] "நஞ்சுடைமை தான் அறிந்து நாகம் கரந்துறையும்". இந்த ஊழியனர் பகிரங்கத்தில் வரமாட்டார்கள். வரமுடியாது; ஏன்? தன்னை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை அல்லவா? இந்தக் கபட சிந்தையினரைப் பகிரங்கத்தில் இழுத்துவிடுதல் அரசாங்கத்தாரின் கடமையாகும். இவர்கள் தாங்கள் ஆசிரியர்களின்— சைவ ஆசிரியர்களின— உற்ற நண்பர்கள் என்று சொல்லித் திரிகிறார்கள். இவர்கள் கூறுவது எவ்வளவு தூரம் உண்மை என்பதை, ஓர் சைவாசிரியர் கூட்டத்தில் நிரூபணம் செய்யவேண்டியது அவசியம். சைவாசிரிய உலகத்திலுள் ஒவ்வொருவரும் நோக்கி [illegible] கப்பட்டுள்ள கபடங்களுக்கு, அவ்வாசிரியர் சார்பாகப் பேசுவதற்கு எனக்கு உரிமை உண்டு? இவர்கள் தங்கள் உரிமையைப் பகிரங்கத்தில் நிரூபித்துக் காட்டமுன், இவர்களுடைய பித்தலாட்டங்களையும், எழுத்துக்களையும் கைக்கொள்ளல் அரசாங்கத்தார்க்கு அழகல்ல என்பது எனது அபிப்பிராயம்.

மகாத்மாகாந்தி ஜெயந்தி விழா

நிகழும் விக்கிரம வருஷம் புரட்டாசிமீ 19ந் திகதி (4-10-40) வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணி முதல் அகிலலோகமூர்த்தி மகாத்மா காந்தியடிகளினது 72வது வருட ஜெனனவிழா, யாழ்ப்பாணம் சமூக ஊழிய இளைஞர் சங்கத்தின் ஆதரவில் வண்ணார்பண்ணையிற் பிரபல்ய[illegible] "கலாநிலைய" மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

1. வந்தே மாதரம்.
2. காந்திஜீயின் படத்திறப்பு ஸ்ரீ. N. சங்கரப்பிள்ளை B. A.
3. (1) [illegible]
   (2) சங்கீதம்: தேசியகீதம்.
4. "காந்திஜீயும் தேசியமும்" என்னும் விஷயமபற்றி ஸ்ரீமதி மகேஸ்வரி [illegible] சொற்பெருக்காற்றுவார்.
5. "மகாத்மாஜீயும் சமூக சேவையும்" (சொற்பொழிவு) சுவாமி உருத்திரகோடீஸ்வரர்.
6. "அஹிம்சையும் காந்திஜீயும்" (சொற்பொழிவு) மகா மகோ பாத்தியாய இராமசாமி சர்மா.
7. தலைவர் குறிப்புரை
8. வந்தேமாதரம்.

அபிமானிகள் சமூகம் அளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

—கடித.

நமது கொழும்புக் கடிதம்

கண்ணாடி வீட்டில் வசிப்பவர்—டக்ரர் செல்லப்பாவின் புதிய நியமனம்—வகுப்பு வாதிகளுக்குச் சாட்டை—அரசாங்க சபை யங்கத்தவர்களின் பராமுகம்—காரணம் என்ன—சுருட்டுத் தொழிற்சங்க அங்குரார்ப்பணம்

(நமது நிருபர்)

கொழும்பு: 1-10-40

விவிலிய நூல் புதிய ஏற்பாட்டில் படித்த கதையொன்று எனக்கு இப்போது ஞாபகத்தில் வருகிறது. ஒரு சமயத்தில் ஓர் குற்றவாளியை, அந்நாட்டு வழக்கப்படி அந்நாட்டு மக்கள் கல்லால் எறிந்து கொல்லமுற்பட்டார்கள். ஆண்டவரும் யேசுநாதர் அங்கு வந்து, "இக்குற்றவாளியை நீங்கள் கல்லால் எறிந்து கொல்ல முற்படுகிறீர்கள். ஆனல் உங்களில் குற்றம்செய்யாதவன் ஒருவன் உளனேல் அவனே இவனை எறிந்து கொல்லட்டும்" என்றாராம். இம்மாற்றத்தைக் கேட்டவுடன் அவர்கள் யாவரும் வெட்கத் தலைகுனிந்தார்கள் என்று விவிலிய வேதம் கூறுகிறது. சென்ற வாரம் நமது அரசாங்கசபையில் உள்ள பிரதிநிதிகள் சிலர் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தைச் சக்கை சக்கையாகப் பிளந்து விட்டார்கள். ஸ்ரீமாக். நடேசனும், ஸ்ரீமாக். மகாதேவாவும், ஸ்ரீமாக். இராசரத்தினத்தின் நடவடிக்கைகளைக் கண்டிக்கப் பலவேறு காரணங்கள் இருக்கலாம். ஆனல் மாத்தளைப் பிரதிநிதி மிஸ்டர் அலுவிகாரை இவ்விஷயத்தில் பிரவேசித்தது, "கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான்" என ஆகுமல்லவா. நேரிட்டதையிட்டு வருந்துகிறேன். ஸ்ரீமாக். இராஜரத்தினம், சைவவித்தியாவிருத்திச் சங்கத்து ஆசிரியர்களிடம் பணம் பெறுகின்றார் என்பது ஷெடியார்கள் சுமத்திய பிரதான குற்றச்சாட்டு. இது முழுவதும் பொய். முட்டாள்தனமான பொய். சைவமக்களின் பிரதான ஸ்தாபனமான சைவவித்தியா விருத்திச் சங்கத்துக்கு, சைவ ஆசிரியர்களும், ஏனைய சைவாபிமானிகளும் பணம் உதவினால் [illegible] ராகள். அப்பணத்தை—தாமாக வலியக் கொடுக்கும் பணத்தை— செலவழிக்கவும், அல்லது தனது ஊழியர்களுக்குக் கொடுக்கவும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்துக்குப் பூரண உரிமையுண்டு. இந்த உரிமையை எவராலும் பறிக்க முடியாது. ஆனல் ஸ்ரீமான் நடேசனையும் மகாதேவாவையும் ஒன்று கேட்க விரும்புகிறேன். சைவவித்தியாவிருத்திச் சங்கத்தை ஒழிக்க ஏனைய ஸ்தாபனங்களும் முகாமைக்காரரும் வைத்து நடாத்தும் வித்தியாசாலைகளில் ஆசிரியர்களிடம் பணம் அறவிடப்படுவதில்லையா? ஆசிரியர்களாயுள்ள கத்தோலிக்க குருமாரும், விறதர்மாரும், கன்னிகாஸ்திரிகளும் அரசாங்கத்தில் இருந்து வேதனமாகப் பெறும் பணம் எங்கு யாரிடம் போகின்றது? பாதிரி பள்ளிக்கூடங்களில் உபாத்தியாரிடம் ஓர் விகிதம் பணம் கழிக்கப்படுவது இல்லையா? யாழ்ப்பாணத்தின் பிரதான ஓர் ஹிந்து கலாசாலையில் நிகழ்வது என்ன? அங்கேயுள்ள ஆசிரியர்களுக்கு ஒழுங்காக, வெட்டு இல்லாமல் வேதனம் கொடுக்கப்படுகின்றதா? தன்னை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை, ஸ்ரீமாக். நடேசபிள்ளை இதனைப் பகிரங்கத்தில் வெளியிடுவாரா? கண்ணாடி வீட்டுக்குள் வசிப்போர் மற்றையோர்க்குக் கல் எறிவது அழகு அல்லவே?

0 0 0

வைத்திய சுகாதாரப் பகுதி உதவித் தலைவராகவுள்ள டக்ரர் S. T. குணசேகரா அடுத்த ஆண்டுடன் கடமையிலிருந்து இளைப்பாறப் போகின்றார். காலியாகும் பதவிக்கு சுகாதாரப் பகுதியின் உதவி அதிகாரியாகத் தற்போது கடமை பார்க்கும் டக்ரர் S. F. செல்லப்பா உட்படச் சிலர் மநுப்பண்ணினர். அரசாங்கசபையின் சுகாதாரப் பகுதி மந்திர நிர்வாகசபையினர், இது விஷயமாகச் சென்ற வாரம்கூடி டக்ரர் செல்லப்பாவையே காலியாகும் பதவிக்குச் சிபாரிசு செய்திருக்கின்றார்கள். டக்ரர் செல்லப்பா ஓர் தமிழ் மகன்; சிங்களர் ஆதிக்கம் செலுத்தும் அரசாங்கப் பகுதிகளிலே தமிழ் மக்கள் முன்னுக்கு வரமுடியாது என்று ஓர் சிலர் பிரசாரம் செய்துவரும் இக்காலத்திலே டக்ரர் செல்லப்பாவின் நியமனச் சிபாரிசு இந்தப் பிரசாரம் எத்தகை யஆதாரமற்றதென்பதைஎன்றுபுலப்படுத்தும், இன்னும்இந்த வைத்திய சுகாதாரப் பகுதியில் உள்ள ஓர் விசேஷ அம்சம் என்னவானுல், மந்திரி ஓர் சிங்கள வகுப்பினர்; அவருடைய காரியதரிசி முஸ்லிம் வகுப்பினர். பிரதம வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டிருப்பவர் தமிழ் மகன். இந்த அம்சம் வகுப்பு வாதிகளுக்குத் தகுந்த ஓர் சாட்டையாகும்.

0 0 0

வரவு செலவுத்திட்ட விவாதமும் ஒருவாறு முடிந்து விட்டது. இத்திட்டம் சம்பந்தமான விவாதத்தினிடையே, பரஸ்பரம் குரோதம், வசைமாரி என்பவற்றை அங்கத்தவர்கள் அள்ளி இறைத்தனர் அன்றி உருப்படியான எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. பராமுகம், ஒழுங்கின்மை, கட்டுப்பாடின்மை என்பவைகளே அரசாங்க சபை அங்கத்தவர்களின் தற்போதைய இலக்கணங்களாக விளங்குகின்றன. அரசாங்கசபைத் தேர்தல் தவணையை ஒத்தி வைத்ததே, இக்கேவலநிலைக்குக் காரணமென்று கூறினும் பொருந்தும். இன்னும் இரண்டு ஆண்டு காலத்திற்கு நிம்மதியாகக் காலம் கழிக்கலாம், பதவிகளில் அட்டைபோல ஒட்டிக்கொண்டிருக்கலாம் என்ற துணிவு இருக்கும் வரையில் மேலே சொல்லப்பட்ட இலக்கணங்கள் அங்கத்தவர்களுக்குத்தோன்ற என்ன தடையுண்டு? பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்த விஷயத்தில் பெரிய தவறு இழைத்து விட்டனர் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் பொதுஜன அபிப்பிராயத்தைக் கலக்காமல் தேர்தல் தவணையை ஒத்தி வைத்ததுவே அங்கத்தவர்கள் பொறுப்பற்றவராயிருத்தற்குக் காரணமாகும்.

0 0 0

கொழும்பில் சென்ற ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப் பெற்றிருக்கிறது. கைத்தொழில் மந்திரி மின்னர் கொறியா உட்படப் பலபிரமுகர்கள் இச்சங்கக் கூட்டத்திற்குச் சமுகம் அளித்துத் தம்மால் ஆன புத்திமதிகளைக் கூறினர். கூட்டம் நடைபெற்றதிலும், மந்திரி பேச்சிலும், பிரமுகர்களின் வாழ்த்திலும் ஒருவித குறைவும் இல்லை. இந்தச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தைப் போலவே வட இலங்கையிலும் ஓர் பெரிய சுருட்டுத் தொழிற் சங்கம் 1936-ம் ஆண்டில்ஸ்தாபிதமானது. சில காலம் நல்ல வேலை செய்தது. சுருட்டுத் தொழிலின் கேவல நிலைமை ஆராய்ச்சி செய்து ஓர் அறிக்கையைவெளியிட்டது. அதுக் கோஷ்டி ஒன்றினை மந்திரியிடம் அனுப்பிச் சுருட்டுத் தொழிலின் கேவல நிலைக்குரிய காரணங்களையும் நிவர்த்திக்கும் மார்க்கத்தையும் தெருட்டியது. தொழிலாளரின் வேதனத்தைமுதலாளிமார் குறைக்காதபடி கருமம் ஆற்றியது. புகையிரதத் தீர்வையைக் குறைப்பித்தது. ஆனல் சற்றில் அச்சங்கம் அழிந்து ஒழிந்து விட்டது. காரணம் பொருமை, குசு, கும்மிசி என்பனவே. இதில் இருந்து கொழும்பில் உள்ள சுருட்டுத் தொழிலாளர் சங்கம் ஓர் நல்ல பாடம் படிக்கலாகும். ஒற்றுமையில்லாவிட்டால் அரசாங்கத்தாராலும் ஏனையோராலும் ஒன்றும் செய்ய முடியாது. ஆனல் சுருட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஒற்றுமைகொண்டு ஏதும் கருமம் ஆற்றத் தொடங்குமுன், அன்னிய பிடிகளும் சொற்றுக்களும் சாட்டைத் தம்மயமாக்கிவிடும்.

தேகவியோகம்

ஸ்ரீமதி சி.ஞானப்பூங்கோதை அம்மாள்

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த பிரம ஸ்ரீ சிவகடாட்சக் குருக்களின் பத்தினியாராகிய ஞானப்பூங்கோதை அம்மாள் செப்டம்பர் மாதம் 30 ௨ திங்கட்கிழமை யன்று தேகவியோகமாயினர் என்னும் துக்கச்செய்தியைத் தெரிவிக்க வேண்டியவர்களாகின்றோம். அடுத்தநாள் இமக்கிரியைகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. இவருக்கு இறக்கும் போது வயது 60.

இவரைப்பிரிந்து வருந்தும் புத்திரர்களாகிய சி. சுப்பிரமணியஐயர் (திருக்கணிதபஞ்சாங்க கணிதர்) அவர்களுக்கும், சி.முத்துச்சாமிஐயரவர்களுக்கும், சகோதராகிய சி. கல்யாணசுந்தரஐயரவர்களுக்கும், சுற்றமித்திரர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த அநுதாபம் உரித்தாகுக.

சைவ வித்தியாவிருத்திச் சங்கம் தனக்கு விசேஷ சலுகையை நாடவில்லை

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

ளிடமிருந்து வாங்கும் சம்பளத்திலிருந்து நியதமான பகுதியொன்றைக் கொடுப்பதே வழக்கம். தெற்கிலங்கையில் 1935 வரையில் ஆங்கிலமும் சிங்களமும் படிப்பிக்கும் ஏறக்குறைய நான்கு தவிபாஷா பாடசாலைகளிலே சம்பளம் வாங்கப்படாமையால் ஆங்கில உபாத்தியாயர்கள் சம்பளம் முழுவதையும் அரசாங்கமே கொடுத்தது. அக்காலம் வித்தியாகர்த்தாவாயிருந்த மிஸ்டர் L. மக்கிறேயை வடக்கிலங்கையிலும் சில பாடசாலைகளுக்கு அதே சௌகரியத்தைச் செய்யும்படி கேட்டேன். அவர் இலங்கை முழுவதிலும் 50 பாடசாலைகள் வரை இலவச தவிபாஷா பாடசாலைகளாக நடாத்தப் படலாமென்று சிபார்சு செய்தார். அக்காலத்திற் சங்கத்தின்கீழ் உத்தியோகம் பாராத ஆசிரியர்கள் தங்கள் சம்பளத்தில் அரசாங்கம் கொடுக்கும் பகுதியையே பெற்றுக் கொண்டு தவிபாஷா பாடசாலைகள் நடாத்த முன்வந்து தொடங்கினர்கள். ஆறு பாடசாலைகள் வரை சங்கம் நடாத்தியது. இது மிஸ்டர் மக்கிறேக்கு மாத்திரமன்றி அவருக்குப் பின்வந்த மிஸ்டர் Mc. D. ஜெபிசனுக்கும் நன்குதெரியும். 1936 இலும் 37 இலும் மிஸ்டர் ஜெபிசன் யாழ்ப்பாணத்தில் நடாத்திய மனேசர்மார் கூட்டங்களில் இந்த விஷயம் பேசப்பட்டு விவாதிக்கப்பட்டது; அக்காலை தாம் அவர் இதைப்பற்றியறிவார். 1938 ஜுலையில் வித்தியாபகுதி பிள்ளைகளிடம் சம்பளம் வாங்க வேண்டு மென்றும் ஆசிரியர்களுக்கு முழுச் சம்பளமும் கொடுக்க வேண்டுமென்றும் எழுதியது. சங்கம் 14 ஆங்கில உபாத்தியாயர்களுக்கு வேலை நிறுத்தும்படி அறிவித்து ஆறு பாடசாலைகளையும் தமிழ்ப் பாடசாலைகளாக மாற்றும்படி எழுதியது. ஆங்கில ஆசிரியர்கள் மிஸ்டர் நடேசனைக் கிட்டினர்கள். அவர் மனேசர் கொடுக்கவேண்டிய தொகைக்குச் சமனுன தொகைக்குப் பிள்ளைகளுக்கு இலவச புற்றச் சீட்டுக்கள் கொடுக்கும்படி புத்திசொன்னதாகச் சொல்லப்படுகின்றது. இவ்வெளிய புத்தியை அவர்கள் புறக்கணித்தமை அவர்களுக்கும் சங்கத்துக்கும் பெருமையாகும். பின் மிஸ்டர் T. B. ஜயாவை அவர்கள் கிட்டினர்கள். [illegible] னும் செய்த முயற்சியால் வித்தியாகர்த்தர் ஆசிரியர்கள் தங்கள் சம்பளத்தை எது செய்தாலும் நிறுத்தத் தனக்கு அதிகாரமில்லை யென்று எழுதினர். இதனுல் ஆசிரியர்கள் மானேசர் கொடுக்கவேண்டிய தம் சம்பளப்பகுதியைத் தாம்கொடுப்பதை அங்கீகரித்தார். மானேசர் கொடுக்கவேண்டிய சம்பளப் பகுதியைக் கழித்துக்கொண்டு மிகுதியைக் கொடுப்பது என்பதைப்பற்றிய பேச்சே இல்லை என்பதை மறக்கவொண்ணுது. மானேசர் பாகம் மானேசரால் வித்தியாகர்த்தருக்கு அனுப்பப்பட வித்தியாகர்த்தர் ஆசிரியர்களுக்கு நேரே தபாற் கந்தோர்கள் மூலம் முழுச் சம்பளத்தையும் கொடுப்பார். மிஸ்டர் அ. மகாதேவன் சுட்டியபடி சம்பளத்தின் ஒரு பகுதி கொடுக்கப்படுவதைப்பற்றிய பேச்சு வரவிடவில்லை. ஆசிரியர்கள் மானேசர் பாகம் சேர்ந்த சம்பளத் தொகைக்கே வருமானவரி கொடுப்பதனுல் உபகாரச் சம்பளத்துக்கும் உரியவர்கள் என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். மிஸ்டர் மகாதேவன் தனது பிறின்சிப்பல் மிஸ்டர் நடேசனைப் பாடசாலைக்கு வராத நாட்களுக்கு முழுச்சம்பளம் பெறுவதற்கு அநுமதித்தமை எனக்கு விளங்கவில்லை. உபகாரச் சம்பளமேயன்றிச் சம்பளமுஞ் சேர்த்து அரசாங்கத்தை அனுப்பிப் பெறுதல் அவர் மனச்சாட்சியை உலுக்கவில்லைப் போலும்.

தமிழ் ஆசிரியர்கள் கோடை

மிஸ்டர் அறுவிகாலை கொண்டு வந்த வேறொருவிஷயம் எனது சொந்த லாபத்துக்காகத் தமிழாசிரியர்களிடமிருந்து நெருக்கிப் பணம் வாங்கப்பட்டது என்பதாகும். சட்டத்தின்படி ஒருவர் தனது பராமரிப்புக்காரருக்கு ஏதாவது கொடுத்தால் அது பலவந்தம் நெருக்கம் ஆகிய முறையற்ற தூண்டுதலின் பேரால் என்று சொல்லப்படும். ஆசிரியர்கட்கும் மானேசருக்குமிடையில் நடக்கும் காரியங்களில் அவ்விதத் தொல்லைக் கிடமில்லை. ஒவ்வொருவர் விஷயத்திலும் அது நிரூபிக்கப்பட வேண்டும். ஓர் ஆசிரியர் மானேசருக்கோ வேறெவருக்கோ தான் விரும்பியதைக் கொடுப்பதைப்பற்றி எவராவது முறையிட முடியாதென்றெண்ணுகிறேன். மாசம் மாசம் கொடுப்பவரும் தான் 4ரூபா 80சதம் கொடுத்ததாகச் சத்தியக்கடுதாசி முடித்து மிஸ்டர் அறுவிகாலைக்குக் கொடுத்தவருமாகிய மிஸ்டர் V. நடராசா போன்றவர் முறையிடுதற் கின்னும் இடமில்லை. அந்த 4 ரூபா 80 சதம் அவர் சம்பளத்தின் 4 வீதம். சென்ற மார்ச் மாதத்திலே சங்க ஆசிரியர்கள் கூடிய கூட்டமொன்றில் சங்கநிதிக்கு 4 வீதம் கொடுக்கவேண்டும் 6 வீதம் கொடுக்கவேண்டும் என்ற பிரேரணைகளைத் தள்ளி 8 வீதம் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். பொதுக் கூட்டத்தில் அபிப்பிராயபேதமிருந்தபடியால் ஆசிரியர்களை 4 வீதம் கொடுக்கும்படியே கேட்பதாக நிர்வாகசபை தீர்மானித்ததாகத் தெரிகிறது. ஆசிரியர்கள் சிலர் 4 வீதம் கொடுத்து வருகிறுர்கள். சிலர் ஒன்றும் கொடுக்கவில்லை; இவர்கள் மானேசரது அதிருப்திக்கு ஆளாகவில்லை; இவர்கள் மாற்றப்படவுமில்லை. ஆசிரியர்கள் முந்தியும் காலத்துக்குக் காலம் கூடித் தாம் விரும்பியதைக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறுர்கள். ஆசிரியர்கள் யாவரும் ஒருபோதும் கொடுத்ததில்லை என்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். அவர்கள் ஒழுங்காகக் கொடுத்துவந்தால் சென்ற 16 வருஷங்களில் சங்கத்துக்குச் சேர்ந்த பணம் அறுபத்தையாயிரமாயிராமல் நான்கு மடங்காயிருக்கும். இப்போது வருஷம் 15 ரூபா சராசரி ஒருவர் கொடுத்ததாகவுமில்லை.

மற்றவர்கள் செய்வது

மிஸ்டர் நடேசனும் மிஸ்டர் மகாதேவனும் பரமேஸ்வரக் கல்லூரி ஆசிரியர்களும் இராமநாதன் கல்லூரி ஆசிரியர்களும் பணம் கொடுப்பதை மறுக்கக் கூடுமோ! தலைமைக் கணக்குப் பரிசோதகரது அறிக்கையிலே (Auditor General) ஒரு மனேச்சர் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்குமுன் 5வீதம் போதகர் நிதிக்கு கழித்ததைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அமெரிக்கன் மிஷன் தமிழாசிரியர்கள் ஏறக்குறைய 5 வீதம் மாசந்தோறும்கொடுத்தார்கள். இப்போதும் கொடுக்கிறுர்கள். உவெஸ்லியன் தமிழாசிரியர்களும் C.M.S. மிஷன் தமிழாசிரியர்களும் 5 வீதம் வரை ஒழுங்காய்க் கொடுக்கிறுர்கள். அன்றைக்கு வேம்படிப் பெண் பாடசாலைஆசிரியை மிஸ் செலக்ரெயற் பழைய மாணவிகள் சங்கத்திலே, மனேச்சருமிருக்கப் பேசும்போது, 5 வருடமாகப் பாடசாலை ஆசிரியைகள் ஒவ்வொருவரும் 5 வீதம் தங்கள் விடுதிக் கட்டடத்துக்குக் கொடுத்தாகக் கூறினர்.

கத்தோலிக்க'வாதர்'மார்'மதர்'மாரும் 'பிறதர்'மார் 'சிஸ்டர்'மாரும் சுதேசிகளுக் சம்பளங்கொடுக்கும் புறெடெஸ்டன்ற்மிஷனறிமார்சிலரும்தங்கள்ஸ்தாபனங்களுக்காகத் தங்கள் சம்பளம் முழுவதையும் கொடுப்பது நன்குய்த் தெரிந்த விஷயம். சட்டம் ஆட்களை மதியாது. இத்தப் பாதிரிமாரும் கிறிஸ்தவ பாடசாலை ஆசிரியர்களும் அரசாங்க சபை அங்கத்தவர்கள் சிலர் நடத்தும் [illegible] பாடசாலை ஆசிரியர்களும் தாம் விரும்பியதைத் தங்கள் ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கலாமாயின் சைவ வித்தியா விருத்திச் சங்க ஆசிரியர்கள் தாம் விரும்பியதைத் தங்கள் ஸ்தாபனத்துக்குக் கொடுப்பதில் என்ன பிழையோ! சைவ வித்தியா விருத்திச் சங்க நிதிக்குக் கொடுக்கும் ஆசிரியர்கள் யாவரும் அதன் அங்கத்தவர்கள் ஆகின்றுர்கள் என்பதையும், அதை அரசாங்கசபை அங்கத்தவர்கள் சிலர் மதியாவிட்டாலும் ஆசிரியர்கள் மிக மதிக்கிறுர்கள் என்பதையும் சிந்திக்கவேண்டும்.

அங்கத்துவம்

ஆசிரியர்கள் தங்கள் மானேசரை ஏன் நியமிக்கக் கூடாதென்பது எனக்கு விளங்கவில்லை. ஆசிரியர்களுக்குச் சொந்தமான பாடசாலைகளிலே அவ்வாசிரியர்கள் நியமிக்கும் ஆட்களை மானேசர்களாய் அங்கீகரிப்பதுண்டு. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஆசிரியர்கள் மற்றை அங்கத்தவர்களோடு சேர்ந்து பிரேரகர்களையே தெரிவு செய்யக் கூடும். இந்தப் பிரேரகர்களே தங்கள் கூட்டத்தில் மானேசரையும் மற்றை உத்தியோகத்தர்களையும் தெரிவு செய்வார்கள். ஆசிரியர்கள் எங்கள் அருமைக் குழந்தைகளைப் பொறுப்பெடுத்து அவர்களை மனுஷர்களாக்கத் தக்கவர்களாயின், ஆசிரியர்கள் மற்றவர்களுடன் சேர்ந்து மந்திரிகளாயும் இலங்கைக் கல்வி முழுவதையும் நடாத்தும் கல்வி நிர்வாகசபை அங்கத்தவர்களாயும் வரும் அரசாங்கசபை அங்கத்தவர்களைத் தெரிவு செய்யத் தக்கவர்களாயின், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தாசிரியர்கள் மற்றை அங்கத்தவர்களோடு சேர்ந்து மானேசரைத் தெரியும் பிரேரகர்களைத் தெரியத்தக்கவர்கள் அல்லரோ?

பரமேஸ்வரக் கல்லூரியினதும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினதும் பணநிலை

சைவ வித்தியா விருத்திச் சங்கம் கடனில் முழுகியிருக்கிறதென்று கூறி அதைப் பரிகாசம் செய்த மிஸ்டர் நடேசனது முட்டாள்தனத்தைப்பற்றி மிகத் துக்கமாயிருக்கிறது. சங்கத்துக்குக் கடன் 17000 ரூபா. இதின் சமது அக்கிராசனருக்கும் வேறு பிரேரகர்கள் இருவருக்கும் 10000 ரூபா வரையிற் போகவேண்டும். ஆக 7000 ரூபா வரைதான் பிறருக்குச் செல்லவேண்டிய தொகை. ஆனல் மிஸ்டர் நடேசன் பிறின்சிப்பல் ஆனபின்பு, சேர். P. இராமநாதன் இறந்தபின்பு, பரமேஸ்வரக் கல்லூரிக்குக் கடன் 20000 ரூபாவுக்கு மேல்; இதற்கிடையில் பிள்ளைகள் தொகை 600 இல் இருந்து 100, 150க்குச் சுருங்கிவிட்டது.

அந்த விளக்கம்

மிஸ்டர் அறுவிகாலை கொண்டுவந்த கடைசி விஷயம், தான் கூறிய நான்கு விஷயங்களைப்பற்றியும் ஆசிரியர்கள் செய்த முறைப்பாட்டின் மேல் வித்தியாதரிசி ஒருவரால் ஒரு விளக்கம் நடத்தப்பட்டதென்பதாகும். இந்த விளக்கம் மிஸ்டர் சுவாமிநாதனை மூன்று மாணவர்களைச் சேர்க்க மறுத்த என் கட்டளையை மீறியதற்காக நான் தற்காலிகமாக நிறுத்தியபோது, மிஸ்டர் W. R. உவாற்சனுல் நடத்தப்பட்டது. நிறுத்தியது நீதியோ அன்றோ என்பதே ஆராய்ச்சிக்குரியதா யிருந்தது. ஆனல் தான் கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்குச் சார்பாய்ப் பட்சபாதகம் செய்வது என்னுல் வித்தியாகர்த்தருக்கு எடுத்துக்காட்டி வெளிப்படுத்தப்பட்ட மிஸ்டர் உவாற்சன் நான் மறுக்கவும் விளக்கத்திலிருந்து விலகிவிடுவேனென்று பயமுறுத்தவும் கேளாது தொடர்பில்லாத விஷயங்களுக்குட் புகுந்தார். கேட்டவாய்க் கேட்டுவந்த சாட்சியெல்லாம் ஏற்றுக்கொண்டார். இந்த மனுஷனுடைய தீர்ப்பைத்தான் மிஸ்டர் அறுவிகாலை இறுதித் தீர்ப்பாகக் கவனியேயும் உலகம் முழுவதையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்கின்றுர். இவ்வலுவிற் புழுவுக்கும் சீவிக்க உரித்துண்டு என்பதையும் எவருக்கும் அநீதி செய்ய வாகாதென்பதையும் மிஸ்டர் அறுவிகாலைக்கு ஞாபகப்படுத்துதலே நான் செய்யத் தக்கது. எவருடைய தீர்ப்பும் இறுதித் தீர்ப்பாக இருக்கமுடியாது. ஜயதிலக பாங்க் விஷயத்தில் கொம்மிஷன் செய்த தீர்ப்பை மிஸ்டர் அறுவிகாலையே முறையாய் ஆட்சேபித்திருக்கிறுரே.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின்மேல் அவமானம்

மிஸ்டர்நடேசன் சை. வி. வி. சங்கத்திலே பிரபல சைவர்களில்லையென்று கூறிப் பிரேரகர்களுக்கு விளைந்த அவமானத்தை மிஸ்டர் நடேசன் இந்தியனாகையாலே யாழ்ப்பாணச் சைவப் பிரமுகர்கள் யாரென்றறியவில்லையென்பதையிட்டுப் பொருட்படுத்தாது விடலாம். 1938 இல் தான் மனேச்சராய் வர முயற்சித்தபோது சங்கத்தாற் கழிக்கப்பட்ட மிஸ்டர் நடேசன் சைவப் பிரமுகர்கள் சங்கத்தில் இல்லையென்று கூறுதற்குக் கடைசி மனுஷன். மிஸ்டர் நடேசன் நான் மனேச்சராய் வருதற்கு மிகவும் ஆவற்படுகிறேனென்று நினைப்பதாகத் தெரிகிறது. கல்வி நிர்வாக சபை நான் மனேச்சராவதற்குரிய நிபந்தனைகளை விதித்தபின் சென்ற ஜூன் மாசத்தில் நான் வித்தியாகர்த்தரைச் சந்தித்தபோது நான் மனேச்சராய் வருதல் தர்மம் என்றும் ஆசிரியர்கள் சிலர் 4 வீதம் கொடுக்கிறுர்கள் என்றும் நான் அவருக்குக் கூறியதை மிஸ்டர் நடேசன் அறிந்துகொள்ளலாம். சென்றமாசம் சங்கம் கூடியபோது ஆசிரியர்களிடம் 10 ரூபா மாத்திரம் வாங்கலாம் என்ற நிபந்தனையை ஏற்றுக்கொள்வதனுல் தவிபாஷா பாடசாலைகளிலுள்ள ஆங்கில உபாத்தியாயர்கள் பிள்ளைகள் சம்பளத்துக்குப் பதிலாய் தாம் ஒன்றும் தங்கள் சம்பளத்தின் பேரால் கொடுக்க முடியாமல் வருமாகையால் அந்த நிபந்தனையை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று தீர்மானித்தனர். அப்படிச் செய்யாது விட்டால் இந்த ஆங்கில உபாத்தியாயர்கள் வேலையின்றி யிருக்கவேண்டும்.

அரசாங்கசபை அங்கத்தவர்கள் பாடசாலை மானேஜர்களாயும் பிறின்சிப்பல்மாராயும் இருக்கக் கூடுமோ என்பதைப் பற்றிப்பெரியபேச்சிருக்கின்றது. எனது அபிப்பிராயம் யாதெனில் அவர்கள் அரசாங்கசபை அங்கத்தவர்களாக இருக்கலாம். ஆனல் வித்தியாகர்த்தரை வழிகாட்டிடத்தும் கல்விநிர்வாக சபையின் தவர்களாக இருத்தல் கூடாதென்ப தென்கருத்தாகும்.

தங்கள் சொந்தப் பாடசாலை விஷயமாக வித்தியாகர்த்தரிடம் இரக்கப் போகும் அங்கத்தவர்கள், தங்கள் கடமையைப் பயமின்றி எவ்வாறு செய்யக் கூடும்?

சைவ வித்தியா விருத்திச் சங்கம் விசேஷ சலுகையை நாடவில்லை. அது மற்றைய ஸ்தாபனங்களைப் போலச் சமமாய் நடாத்தப்படக் காத்திருக்கின்றது. நீதி நடக்கட்டும். நமது மனுஷர்கள் செய்யும் பொய்ப் பிரசாரங்களை மீறி உண்மை நல்லியாவராலும் அறியப்படட்டும்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மேசிகரோவின் மேலன்பிள்ளை வழக்காளி
இல 13089
எதிராக
வண்ணர்பண்ணை
1 வயிரவி செல்லப்பாவும் பெண்
2 சின்னம்மா எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 13089-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்வரும் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1940-ம் வருஷம் கார்த்திகை மாதம் 4-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 1000 இதற்கு 27-7-38 தொடக்கம் 100 க்கு 9 வீத வட்டியையும் செலவு ரூபா 20.

காணிவிபரம்

வண்ணர்பண்ணை இறை இலகடிபர நில இல. 2. அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு ரேட்டு வடக்கு முதலி மாணிக்கம் பெண் சின்னம்மாவின் ஆதனம். மேற்கு வாய்க்கால். தெற்கு முருகன் சின்னத்தம்பியின் ஆதனம். இது அடங்கலும்.

முற்பதிவு D [illegible]

சி. சங்கரப்பிள்ளை
கொம்மிஷனர்

தெல்லிப்பழை
23-9-40
Mis 119 3-10-40

Notice of Sale
விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திரிக் கோட்டின் 14292-ம் இலக்க வழக்கில் 1940-ம் ஆண்டு புரட்டாதி மீ 21-ந் தேதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப் பட்டிருக்கும் காணிகளை 1940-ம் ஆண்டு ஐப்பசி மீ 26-ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

கொக்குவில் தற்போது சிதம்பரத்தில் இருக்கும் முத்துத்தம்பி கைம்பெண் சிவக்கொழுந்துவுக்காக அவரின் அற்றோணி கொக்குவில் தம்பையா குமாரசாமிப்பிள்ளை வழக்காளி
எதிராக
1 கார்த்திகேசு தம்பையா
2 சின்னத்தம்பிமுத்ததம்பியும் பெண் வள்ளிநாயகியும் -கொக்குவில்லெதிரிகள்

எதிரிகள் வழக்காளிக்குக் கொடுக்கவேண்டிய தொகை ரூபா 1170 ம் அதற்கு 17.5.39 தொடக்கம் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு ஒன்பது வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 132 சதம் 16 ம்

விபரம்

1 கொக்குவில் இறை தேங்காய்மூலையும் மறுபிரிவுகளும் நி பர. ஆறும் செய்பயிர் வான்பயிர்களும் பனைகளும் வடக்கெல்லையி லிருக்கும் கிணற்றில் பங்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு கந்தையா பெண் தங்கச்சியம்மாவுக்குரிய ஆதனம். மேற்கு இராசையா கைம்பெண் தங்கம்மாவுக்குரிய வாதனம். தெற்கு கிழ்க்காறும் ஆதனம். இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும் சொரியலாக அரைவாசி.

2 மேற்படி இறை தேங்காய்மூலை நி பர. (2) இரண்டும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு மேற்காறும் ஆதனம் மேற்கு இராசையா கைம்பெண் தங்கம்மாவினுதனம் தெற்கு சின்னத்தம்பி பொன்னையாவினுதனம். இதடங்கலும் தெற்கெல்லைக்காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

வேறு விபரம் கொக்குவில் ஸ்ரீமான் வி. கே. ஞானசுந்தரம் பிறக்றர் அவர்களிடம் அறியவும்.

P. Rajaretnam
கமிஷனர்

வண்மேற்கு
29-9-40
Mis 121 3-10-40

Notice of Sale
விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் 14964-ம் இலக்க வழக்கில் 1940-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26-ந் திகதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணியை 1940-ம் வருடம் ஐப்பசி மாதம் 28-ந் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சாமுவேல் முத்தையா டட்லியும் பெண் லீசா கல்லம்மாவும் பண்டத்தரிப்பு வழக்காளிகள்
எதிராக
1 றிச்சேட் மூத்ததம்பி குணரத்தினம்
2 சின்னையாபிள்ளை இராசசிங்கம்
3 சின்னையாபிள்ளை இரத்தினசிங்கம்
4 சின்னையாபிள்ளை பாலசிங்கம்
பண்டத்தரிப்பு
5 S. J. K. தென்சுமனும் பெண்
6 றேஸ் சின்னம்மாவும்
அளவெட்டி
7 சின்னையாபிள்ளை நல்லம்மா
பண்டத்தரிப்பு

விபரம்

தீர்வைத் தொகை ரூபா 1513 ம் அதற்கு 1939-ம் ஆ கார்த்திகைமீ 18உ தொடக்கம் இறுபடும் வரைக்கும் 9 வீத வட்டியும்.

ஆதனடாப்பு

பண்டத்தரிப்பு இறை நாப்பிளாவத்தை கன்றுவளை உலகர் கன்றுவளை வடக்குக்கன்றுவளையும் மேற்குக்கன்றுவளையும் நிலப்பரப்பு 5 மேற்படி நிலப்பரப்பு 5 குளி ½ இருபிரிவுகளும் சேர்ந்து கூடிய நி பரப்பு பத்து குளி அரையும் வீடும் பனைகளும் செய்பயிர் வான்பயிர்களும் கிணறும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு மதியூகபிரியேற்பிள்ளையி னுதனம். மேற்கு யோன் இராசா தெற்கு குணரத்தினம் பெண் பேபி இராசம்மாவுக்குரிய ஆதனம். குறித்த கிணற்றில் தெற்கெல்லைக் காணிக்குரிய கிணற்றுப்பங்கும் நீர்வைப்பங்கும் வழிவாய்க்கால் பாவிப் புரித்தும் பிறரிக்களாக மீதுமடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

P. Rajaretnam
கமிஷனர்

வண்மேற்கு
26.9.40
Mis 120 3-10-40

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு எஸ். சுப்பையா அன் சன்ஸ் என்பவர்களிடம் 1937-ம் ஆண்டு அக்டோபர் மீ 1உ தொடக்கம் 1939-ம் ஆண்டு ஒக்டோபர் மீ 8உ வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப் படாத நகைகளையும் அமானமான நகைகளையும் 1940ஆ ஐப்பசிமீ 20உ ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் எடுபட்டவைகள் பிறக்கலாக மிருதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் கோட்டுக்கட்டளைப் படி விற்கப்படும்.

சி. இராமப்பிள்ளை
வெண்டுஸ்மேஸ்தர்

Mis 122 3—7-10-40

கடிதம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

விறைல் அந்தப் புகார் அப்படிச் செய்கின்றுரா? சிவாலயத்தில் நிகழ வேண்டிய நித்திய நைமித்திகங்களை ஆகம விதிப்பிரகாரஞ் செய்யாததினுல் பட்டான் அர்ச்சகர்கள் அர்ச்சகருக்கு, ஆதீனகர்த்தருக்கு, அயலோருக்கு ஊரவர்களுக்கு அனர்த்தம் நேருமென்று ஆகமங்களிலும் திருமந்திரம் போன்ற தமிழ்நூல்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றதா? மேமி அர்ச்சகருக்கு இனிக் கேடுவர இடமில்லாவிட்டாலும் ஆதீனகர்த்தர் ஊரவர்க்கட்குக் கேடுவருமோ என்று எவரும் அஞ்சுகிறுர்களே!

ஐயா, அப்படிச் செய்வது சரி என்று, அந்த ஐயரொருவரைத் தவிர்த்து, பத்திராசிரியரவர்களாக, பஞ்சாங்க கணிதராக, குருக்கண்மார் எவராக, ஆகமவிற்பன்னர்களாக, அறிஞராக, வேறுயாராக சமாதானஞ் சொன்னலே நான் அச்சமாதானத்தைப் பயபத்தியோடு சிரமேற் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.

இங்ஙனம்
ஒரு பிரமஸ்ரீ

கண்டி, தலைமைத்தமிழ்வித்தியாதரிசி பிரம்ம ஸ்ரீ சதாசிவ ஐயரவர்களுக்கு மத்தியமாகாண கண்டிச்சைவமகா சபையார் மகிழ்ந்து நடாத்திய பிரியாவிடை

நிகழும் விக்கிரம வருஷ புரட்டாதி மீ 11உ (26. 9. 40 வியாழக்கிழமை மாலை (6. 30) மணிக்கு கண்டிப்பகுதி தலைமைத் தமிழ் வித்தியாதரிசி பிரம்ம ஸ்ரீ பா. சி. சதாசிவ ஐயரவர்களுக்கு,சைவ மகாசபை ஆதரவில்,சேர் முகாந்திரம் N. கனகசபை M. M. C. அவர்கள் தலைமையின்கீழ்,பரிமளம் மிகுந்தமலர் கொண்டு அலங்கரிக்கப் பெற்ற'கண்டித் தமிழர் மண்டபத்தில் ஒருபிரியாவிடைக் கூட்டம் வெகுமங்களகரமாக நடைபெற்றது. அத்தருணம் ஆடவர்மகளிராய அன்பர் பலர் மண்டபம் நிறைய அதிகுதூகலத்துடன் குழுமியிருந்தனர்.

ஐயரவர்கள் அன்புமிக்க குடும்பசகிதமாக,மலர்மாலை சூட்டப்பெற்று இனிது வரவேற்கப் பெற்றனர். தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமானது. தித்திப்பான சிற்றுண்டி வகைகளும், 'பால்,பழ,பானதிகளும்,மங்கள தாம்பூலமும் செவ்வனே விநியோகம் செய்யப் பெற்றன.

பின்னர்ச் சைவமகாசபையின் சார்பாக திரு. A. K. வேலுப்பிள்ளை அவர்கள் இனிய கன்மொழி ததும்பிய வாழ்த்துப் பாமாலைப் பத்திரம் ஒன்றை,யசையுடன் பாடி ஐயரவர்களுக்கு ஈனி மகிழ்ந்து அளித்தனர்.

பின்பு கண்டி நகரபரிபாலன சபை அங்கத்தினரும் "கிங்ஸ்வூட்" ஆங்கில கல்லூரி ஆசிரியருமாகிய V. D. போல்ராஜ் அவர்கள், ஐயரவர்களின், கல்வி நிறைவு,தியாகம்'சேவை,சீலம் ஆதிய குணநிச்சயங்களையிட்டு ஆங்கிலத்தில் ஓர் சொற்பொழிவு ஆற்றினர்.

அப்பால் திருவாளர்கள் J. V முத்தையா, ஆசிரியர். V. கணபதிப்பிள்ளை ஆசிரியர் K. சம்பந்தபிள்ளை A. K வேலுப்பிள்ளை ஆகியோர்ஐயரவர்களின் குணநலன்களை, நயந்து வியந்து, பற்பல பாக்களால் பாடி சபையோரை நன்கு மகிழ்வித்தனர்.

இன்னும் கண்டிக் கச்சேரி கிலபதி பாலன காரியாலயத் தலைமைலிகிதர் திரு S. முத்தையா அவர்களும்,ஓய்வுபெற்ற [illegible] திரு S. தம்பிராசா S. பாலசிங்கம் அவர்களும்,திரு. V அம்பலவாணரவர்களும்,சரு M.சின்னத்தம்பி ஆசிரியரவர்களும்,பிரம்ம ஸ்ரீ கு.பால சுப்பிரமணியக் குருக்களவர்களும்,செனரல காரியதரிசி ஆ நவரத்தினராசா அவர்களும்,சபாசைரவர்களும், நமித்த ஐயரவர்களின் தமிழ்சமாணவர் வகுப்பமைப்பு,சிவபூசை,ஆதியாம் சற்குண நற்செய்கைகளையும்,குறித்த வகுப்பைத்தனாது மூன்று வருடங்களாகத் தொடர்ந்து,முறையாகக் கொண்டு நடாத்திய ஆற்றலைப்பற்றியும், அப்புற நூல்களை ஆர்வத்தோடு ஆராய்ந்து பயிற்றியதிய திறமையும், மாணவரின் ஐயந்திரிபுகளை, அகற்றி,மதிகொளுத்தி வளர்த்த ஐயரவர்களின் கைமாறுகவாக் கடப்பாட்டையும்,மனமாரப் பாராட்டி வாயாரப்புகழ்ந்தனர்.மேலும்ஐயரவர்களுக்கும்குடும்பத்தாருக்கும் நலவாழ்வும் நீர்க்க ஆயுசும், மற்றும் சகலசுப சகலங்களும் கடாட்சித்தருளும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தினர்,

ஐயரவர்கள் அரிய,பிரிய-விடைகூறமுகத்தான் எழுந்து பொன் போலும் புத்தி மதிகளையும், அநுபவம் வாய்ந்த மணி மொழிகளையும் சுவைததும்ப, இனிது எடுத்து இயம்பி அவையினரையெல்லாம் ஆனந்த பரவசமாக்கினர்.

பின்பு காரியதரிசியவர்கள் சபையின் சார்பாக யாவருக்கும் நன்றி கூறியதும், (9. 30)மணியளவில் சங்கீத ஆசிரியர் இருவானர், S. நடராசா அவர்களது திவ்ய தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

—சடித

செந்தமிழின் சிறப்பு

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

என்று தமிழைச் சிறப்பித்துள்ளனர். மறைகளுக்கு மேட்டா முதமிழாகரனைத்தமிழினுல்பாடுவோர் குற்றஞ்செயினும் குணமாகக்கொளவாரென்ருர். —வரும்

உலகம் பலவிதம்

23-ம் முறை சிறைவாசஞ் செய்யும் ஸ்ரீமதி சின்னம்மா

கொழும்பைச் சேர்ந்த டெஹிவலையில் வசிக்கும் சின்னம்மா என்னும் ஒரு பெண்ணணங்கு குடித்து வெறி கொண்டு அக்கிரமஞ் செய்தாள் என்னுங் குற்றச்சாட்டின் பேரில் ஒரு மாசக் கடுஞ் சிறைத் தண்டனை விதிக்கப் பெற்றுள். விசாரணையின் போது நீதிபதி, அந்தப் பெண்மீது வழக்குத் தொடர்ந்த பொலிஸ் சார்ஜன்ற பெறிடுவைப் பார்த்து "இந்தப் பெண் முந்தியும் குற்றவாளியெனக்கண்டு தண்டனை விதிக்கப் பட்டதுண்டோ' என வினவியபோது, "ஆம் ஐயா, முந்தியும் இப்படியே குடித்து வெறித்து அக்கிரமஞ் செய்ததென்ற குற்றங் காரணமாக 22 முறை சிறைத்தண்டனை பெற்றுள்; இரண்டுமுறை அபராதம் விதிக்கப் பெற்றுள்" என்று கூற, அப்போது நீதிபதி அந்தப் பெண்முகத்தைப் பார்த்து அது மெய்தானு என்று கேட்க, "ஆம், ஆண்டவனே, அது மெய்தான், ஆனல் இனி அப்படி ஒரு போதும் செய்ய மாட்டேன்; எனமீது இரக்கங் காட்டவேண்டும்" என்று இரந்தாளாம். அதன் பின்னர்த்தான அந்த முதணங்கிற்கு நீதிபதி ஒருமாச மதியற்றண்டனை விதித்தாராம்.

ஐயர் துணிந்த துணிவு

வண்ணர்பண்ணைச் சிவன்கோயிலில் ஆகமத்திற்கு மாறாக, உலகத்திற்கு விரோதமாக அமாவாசை முழுவதும் வியாபகமாயுள்ள செவ்வாய்க்கிழமை அதாவது நவராத்திரிப்பூசை ஆரம்பதினத்திற்கு ஒருநாள் முந்தி, அங்குள்ள பிரதான அர்ச்சகர் கும்பதாபனமும் பூசையும் தொடங்க வாலாம்பிகை அம்பாளையும் கொண்டு போய்க் கொலுவில் இருத்தி விட்டாரென்று இன்னொரு பிரமஸ்ரீ "கேட்பாரில்லையா" என்று முறையிடுகின்றுர். இவ்விஷயம் மெய்தான் என்பது முருகேசையருக்குத் தெரியும். செகதண்மை பூண்ட இந்த அந்தணர் செய்யுஞ் செய்கையைவிட்டு [illegible] பெரியோர் ஐயரவருளு "சுவாமி! ஏன் இப்படிச்செய்வது முறைபவலவே; ஊரோடு ஒக்க ஓடு, ஒருவனோடு ஒல் நீட்டாடுக என்பது பழமொழியல்லவா" என்று வியத்துடன் கேட்டபோது, அம்மறையவர் "ஓய்! நவராத்திரி யென்றுல், ஒன்பது இராத்தானே; எட்டு இரவு எப்படி நவராத்திரியாகும்?" என்று குதர்க்கம்பேசி எல்லாரதும் மௌனடிகள் சுறுக்கின்றுராம். ஆனலும்'கேட்பார் சிலரில்லையா"என்று கவலைப்படவேண்டாம்; வலியாரைத் தெய்வங் கேட்கும், அரசன் அன்றறுக்கும் தெய்வம் நின்றறுக்கும் என்பன பழமொழிகளல்லவா? தாயே! தையனாயகி, உன்திருவிளையாட்டை யாரறிவார்!

"நாம் அது சொன்னுற் பாவம்"

சைவப் பிள்ளைகளுக்குச் சைவ முறைப்படி கல்வியூட்டும் நோக்கமாகச் சைவப் பெரியார் கண்ட சைவக்கலாசாலை; தொன்மையோடு கூடியது; அந்தப் பெரியார் காலந்தொட்டுச் சென்ற வருடம்வரை அக்கலாசாலையில் நவராத்திரி காலங்களில் விக்கல் செய்து "விருத்தம் படித்தல்," கும்பஸ்தாபனம், கலைமகள் பூசை முதலிய சத்கருமங்களைச் செய்து வருதல்தான் வழக்கமென்றும், அந்தப் பெரியாரின் பிரதானமான நோக்கமென்றும் காலங்கண்ட முதியோர் இன்னுஞ் சொல்லுகிறுர்கள்; ஆனல் அக்கலாசாலையில் இப்பொழுது நவராத்திரி விழாவையத் தவிர்த்துவிட்டு நேற்றுத் தொடக்கமாகத் தலைநு பள்ளிக்கூடம் நடத்தி வருகிறுர்களாம். அங்குள்ள ஆசிரியர்களா; இது முறையோ என்று சிலர் முருகேசையரை வினவுகிறுர்கள்; முருகேசையர் இதற்கு என்ன விடைசொல்ல முடியும்! கல்வி பயிற்றலின் மேம்பாட்டினைக் கொண்ட ஆராய்ந்தினுல் அவர்களைச் செய்வினைாக்கினா, இவ்வேமை இந்த நவராத்திரி முதலிய இவைகளெல்லாம் வீணத்தனமான கொள்கைகள் என்று ஆசங்கிக்கிறுர்களோ, யார் அறிவார்; படித்தவர்களாகிய உபாத்தியாயர்களுடன் நியாயம் பேச முருகேசையருக்கு ஆற்றலுண்டா? இல்லை. அப்படியல்லவென்று முருகேசு ஞாயம் கேட்கத் துணிந்தால் உபாத்தியாயர் ஒவ்வொருவரும் தனித்தனியும்மூன்று சமாதானமாயினுஞ் சொல்லுவார்களே; அவைமாலும் இப்படிப்பட்ட பெரிய கருமங்களில் முருகேசு தலையிடுவதுபுத்தியல்ல; ஏன்? "ஆமை பிடிப்பார் மல்லாத்துவார்- நாமது சொன்னுற் பாவம்" என்று உலகத்திலே சொல்லுவார்களல்லவா?

"ஈனருக்குரைத்திடல் இடரதாகுமே"

காற்றோடு கூடிய பெருமழை பெய்ய, அம்மழையில் நனைந்து குளிர்பிடித்து நடுங்கிக் கொண்டு கரவன் மரத்திருந்த குரங்கைத் தூக்கணங் குருவி பார்த்து "ஓ வானரமே, உனக்குக்கையுண்டு காலுண்டு, மழை பனி வெயில் காற்று ஆதிய வற்றுல் இடர்ப்படாமல் நீ உனக்கென ஒரு சிறிய வீட்டைக் கட்டிக்கொள்ளலாமே, அப்படிச் செய்வதைவிட்டு, இப்படியேன் கஷ்டப்படுகிறுய், இங்கே பார், நான் சிறிய பிராணியாக இருந்தாலும் எனக்கென ஒரு கூடு கட்டிக் கொண்டு வசதியாக இருக்கிறேனே" என்று புத்தி சொன்னது; அதனைக்கேட்ட குரங்கு ஆத்திரங் கொண்டு "அடசி மூஞ்சி மூடா! நீயா எனக்குப் புத்தி சொல்வது; எனக்கு வீட்டைச் சிதைக்கத் தெரியுமே ஒழிய அமைக்கத் தெரியாது" என்று சொல்லிப் பாய்ந்து சென்று அத் தூக்கணங் குருவியின் கூட்டைப் பிடுங்கிச் சிதைத்து விட்டது.

"வானரம் மழைதனில்
நனையத் தூக்கணம்
தான் ஒரு வழிசொலத்
தாண்டிப் பிய்த்திடும்
ஞானமுல கல்வியும்
நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடல்
இடரதாகுமே"
—பஞ்சதந்திரம்.

அரிசி விலை யுயர்வுக்குக் காரணம்

—0—

றங்கூன் அரிசியை ஜப்பான் ஏராளமாக வாங்குகிறது

இலங்கைக்குப் போதிய உதவி

ஜப்பான் றங்கூனிலிருந்து பெருந்தொகையான அரிசியை விலைக்கு வாங்குவதன் பலனுகக் கொழும்பு அரிசி மார்க்கெற்றில் விலைகள் கூடியிருக்கின்றன.

பர்மாவில் இப்பொழுதுள்ள அரிசி உதவும் நிலைமையைப்பற்றி தொழில் மந்திரிசபையார் பர்மா அரசாங்கத்தோடு கடிதப் போக்குவரத்து நடத்தி வருவதாகவும் இலங்கைக்குக் கிடைக்கும் அரிசி வசதியில் தட்டுப்பாடு ஏற்படுமென அஞ்சுவதற்கு எந்தவகை காரணமும் இல்லையெனத் தகவல் கிடைத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

ஜப்பான் ஏராளமாக அரிசியை விலைக்கு வாங்குவதன் பலனுக உள்ளூர் அரிசி மார்க்கெற்றில் விலைகள் சிறிதளவு அதிகரிப்பதைத் தவிர வேறெவ்வித சங்கடமான நிலைமையும் ஏற்படாதென நம்பிக்கையுடன் கூறப்படுகின்றது.

இலங்கைக்குப் போதிய உதவி

றங்கூனிலிருந்து இலங்கைக்கு அரிசி உதவி கிடைப்பது சம்பந்தமாக மாத்திரம், சிறிது காலத்திற்கு முன், தொழில்மந்திரி றங்கூனுக்குத் தாம் சென்றிருக்கபொழுது இப் பிரச்னையைப் பற்றிப் பர்மா அரசாங்கத்தாரோடு பேச்சு வார்த்தைகள் நடத்தியது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அப்பொழுது இலங்கையின் தேவைகளுக்குப் போதிய அரிசி றங்கூனிலிருந்து உதவப்படுமென்றும், விலையைப் பற்றிய பிரச்னையை ஜாக்கிரதையாகக் கவனித்து, அரிசி விலை மிதமிஞ்சி அதிகரிப்பதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் பர்மா அரசாங்கத்தார் இலங்கையிலிருந்து சென்ற தூதுக்கோஷ்டிக்கு உறுதிமொழி கூறினர்.

அரிசியை அனுப்புவதற்குக் கப்பல்கள் கிடைப்பதைப் பற்றித் தான் சில சந்தேகங்கள் ஏற்பட்டன. கப்பற் போக்குவரத்தில் இடைஞ்சல்கள் ஏற்பட்டாலுங்கூட அரிசியை இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்வதாகவும் பர்மா அரசாங்கத்தார் உறுதி கூறியிருக்கனர். ஆயினும் இப்போது அத்தகைய மோசமான சங்கடங்கள் ஏற்படுமென எதிர்பார்க்கப் படவில்லை.

ஆராய்ச்சி விரிவுரை

திரு. இ. பொன்னையா அவர்கள் பெரியபுராணமும் சைவசித்தாந்த முடிபுகளும் என்னும் பொருள் பற்றி கலாநிலைய மண்டபத்தில் நிகழும் விக்கிரம ஆண்டு புரட்டாதித் திங்கள் 18ந் திகதி (3-10-40) வியாழக்கிழமை பிற்பகல் 6-30 மணிக்கு ஒரு விரிவுரை நிகழ்த்துவார்கள்.

கம்பர்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

2. கார்நடக்கும் படிநடக்கும் காராளர் தம்முடைய
ஏர்நடக்கு மெனிற்புகழ்சால் இயலிசைநாடகநடக்கும்
சீர்நடக்கும் திறனடக்கும் திருவறத்தின் செயனடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே.

மற்று, சோழனை விட்டுப் பிரிந்த இவர் சேரனுலுபசரிக்கப்பட்டுப் பின்சோழன் இரந்து கேட்பவவன் நாட்டினை மீண்டுமடைந்து சிறப்புற்று விளங்கினர். இவர் வாழ்க்கையில் நிகழ்ந்த வரலாறுகள் இவைபோற் பலவுள. அவை விரிப்பிற் பெருகுமாதலின் விடுத்து அப்பாற் செல்வன்.

திருக்கை வழக்கம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சரஸ்வதி யந்தாதி, தமிழ் இராமாயணம் என்னும் நூல்கள் இவராலியற்றப்பட்டன. இராமாயணத்தின் முதலாறு காண்டங்கள் இவராலும், 7ம் காண்டம் வாணிதாதன் என்பவராலும் இயற்றப் பெற்றன. வாணிதாதனை ஒட்டக்கூத்தரென்று கூறுவாருமுளர். இந்த வாணிதாதன் முதலிய புலவோரெல்லாம் கம்பரிடத்திற் பெருமதிப்பு வைத்திருந்தனர் என்பதும், கம்பரின் வித்துவத் தன்மையைக் கண்டு பொறாமையுற்று நின்றனரென்பதும் கம்பரிறந்தபொழுது வாணிதாதனென்பார் கூறிய—

"இன்றோகங் கம்ப னிறந்தநா ளிப்புவியில்
இன்றோதான்
பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருப்ப
நாமடந்தை நூலிழந்த நாள்"

என்னுஞ் செய்யுளாலறியத்தகும்.

கம்பராமாயணம் தமிழில் அருமை வாய்ந்ததொரு நூல். கம்பருடைய செய்யுட்கள் ஒவ்வொன்றும் ஆழ்ந்த கருத்துடையன. விருத்தப்பா வியற்றுவதிற் கம்பருக்கிணையாக யாரையுங் கூறமுடியாது. கம்பராமாயணத்திலிருந்து ஒரு செய்யுளை மட்டும் எடுத்து விளக்கி முடிக்க விரும்புகிறேன்:-

தாடகை விசுவாமித்திரன் வேள்விக்கு இடையூறு செய்து கொண்டிருக்கிறாள். தாடகையைக் கொன்றொழிய அவர் வேள்வி நிகழ்தற்பாடில்லை. தசரதன் மகன் ஸ்ரீராமன் வயதிளையனாயினும் அவனையழைத்துவந்து அவளைக் கொல்விக்க வேண்டுமென்பது அவரெண்ணம். அதனாக அவர் காட்டைவிட்டு அயோத்தியை நாடிவருகின்றார். தசரதன் விரைந்து வரவேற்கிறான், "எது வேண்டினும் அது செய்து தீர்வேன்" என உரைத்து உரைத்து வணங்குகின்றான். விசுவாமித்திரர் ஸ்ரீராமனைத் தருமாறு கேட்கின்றார். தசரதனுளஞ் சோர்கின்றது. உடலந்துடிக்கின்றது. அவனுக்கு மகனை, நால்வரிலும் மூத்தோனை விட விருப்பமில்லை. தானே வந்து குறையை நிவிர்த்தி செய்வதாகக் கூறுகிறான். அதனைக் கேட்டவுடனே விசுவாமித்திரருக்குக் கோபம் பொங்கியெழுகின்றது. அந்த நிலையைக் கம்பர் சித்திரித்துக் காட்டுந் திறன் போற்றத்தக்கது. அச்செய்யுளினமைப்பே அதனிற் பொருந்திய ஓசையே அங்குச் செறிந்த இடக்குத் திண்ணிய சொற்களே அவ்வுருத்திரத்தைத் தெட்டத் தெளிய விளக்கிக் காட்டுகின்றன. அச்செய்யுளைப் பாடுகின்றேன் கேளுங்கள்:—

என்றவ னென்றலுமுனிவோ டெழுந்தனன்மண்
படைத்த முனி இறுதிக்காலம்
அன்றென வா மெனவிமைப்ப அமரர்த்தனர்மேல்
வெயில்கரந்த தங்குமிங்கும்
நின்றனவுந் திரிந்தனவும் நிவந்தெழுந்தொழுக்
கடைப்புருவ நெற்றிமுற்றச்
சென்றனவக் கனகையுந் சிவந்தனகண்
ணிருண்டன போய்த்திசைகளெல்லாம்.

மட்டக்களப்புத் திருத்தொண்டர் கழகம்

இக்கழகத்தின் முதலாவது பகிரங்கக் கூட்டம் 23-9-40 திங்கட்கிழமை மாலை 6மணிக்கு ஆனைப்பந்தி விவேகானந்த வித்தியாசாலை மண்டபத்தில் ஸ்ரீமத் சுவாமி நிஷ்காமானந்தஜியின் தலைமையில் தேவாரபாராயணத்துடன் கூடிற்று.

சுவாமிஜிகள் தலைமைப் பேருரையிற் கழகத்தின் பெருமை பற்றியும் தொன்மை வாய்ந்த சைவசமயமாகிய அன்பு நெறியினையும், அந்நெறியின் வழிநின்று வாழ்க்கை நடாத்திப் பேரின்ப வீடெய்திய திருத்தொண்டர்களது தூயசொன்மலர்களையும், நமது ஜில்லாவில் எங்கும் பரப்பும் நோக்குடனே இக்கழகம் நிறுவப்பட்டிருக்கின்றது என்று இக் கழகத்தின் நோக்கத்தையிட்டும் கூறினர். "தொண்டர்களே பெரியர். பணத்தை அவர் ஆக்குவர். பணம் அன்னாரை ஆக்காது" என்பன போன்ற சுவாமி விவேகானந்தஜியின் வீரமொழிகளையிட்டும் எடுத்துக்கூறினர்.

பின்பு, திருவாளர் வே. சாமித்தம்பி ஆசிரியர் அவர்கள் தொண்டர் தம் பெருமை குறித்துப் பேசுகையில் பொதுவாகப் பெரியபுராணத்துள்ள பல தொண்டர்களையும், அவர்கடம் பெருமையினையும் கூறிச் சிறப்பாகச் சமயகுரவர் நால்வர்களுடைய சிறப்புக்களையும் சுவைபட மொழிந்தனர்.

அடுத்ததாக, ஸ்ரீமான் பண்டிதர் வ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் "திருநாளைப்போவார்" சரித்திரம் பற்றிப் பேசப்புகுந்து, முதலிற் சைவசமயத்தின் சிறப்புக்களையிட்டும், அவர்களவசியம் கைக்கொள வேண்டிய சில சிறந்த குணங்களைப்பற்றியும், சாதியில் உயர்வு தாழ்வு கருதாது மற்றையோரினும் தம்மைத் தாழ்த்தி நடந்துகொள்வதினாலாம் விசேட பயன்களையிட்டும், பின்பு அவற்றோடு திருநாளைப்போவார் சரித்திரத்தையும் தொடர்புறுத்தி அவர்தம் சாதிக்குரிய தொழில் முதலியவற்றிலும் வழாது இறைவனை வழிபட்டே வந்தனராதலின் திருப்புன்கூரில் மேலான காட்சி பெற்றார். இம்மையிலே மறுபிறப்பெய்தினர். என்பன போன்ற சிறப்பியல்புகள் பலவற்றையும் யாவரும் வியக்கத்தக்க முறையாக எடுத்து விளக்கினர்.

இறுதியில் தலைவரவர்கள் பேச்சாளர்களுக்கும், அவைக்குழுமினோர்க்கும், கழகத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்ளத் தேவார ஆராதனையுடன் கூட்டம் நிறைவேறிற்று.

சீனிக்குப்பதில் தாள் பனங்கட்டி

பிரசாரப் படுத்துவதுபற்றி ஆலோசனை

சீனிக்குப் பதிலாகத் தாள் செய்யப்பட்ட பனங்கட்டியை உபயோகிக்கும்படி ஜனங்களைத் தூண்டுதற்குரிய முயற்சிகளைப்பற்றித் தெய்குப்பொருள் ஆராய்ச்சித் திட்டத்தின்கீழ் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

சாராயத்திலுள்ள அருவருக்கத்தக்க வாசனையைப் போக்கும் நோக்கத்தோடு குறித்த ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் டைரக்டர் சில பரிசீலனைகளை நடத்திவருகிறார். சாராயத்திலுள்ள அருவருக்கத்தக்க வாசனையைப் போக்கிவிட்டால் இப்பொழுது பிறநாட்டு மது வகைகளை உபயோகிப்பவர்கள் சாராயத்தையே இனி உபயோகிக்கக்கூடுமென நம்பப்படுகிறது.

QUINOHEMI
BENGAL CHEMICAL & PHARMACEUTICAL WORKS LTD. CALCUTTA
SPECIFIC
MALARIA
குவினோ ஹெமின்

மலேரியாச் சுரத்தையும் அதனலேற்படும்சோகையையும் போக்குவதற்குப் பெரிதும் பயன் விளைக்கும்

குவினைன்

ஓர் கானிக் இரும்பு எவணய அம்சங்கள் ஆதியவற்றைப் பொருத்த முறக் கொண்ட கலவை மருந்து.

வைத்தியர்களாலும் பொது ஜனங்களாலும் உபயோகித்துப் பார்க்கப்பட்டுப் புகழ்ப்பெற்றது.

பெங்கால் கெமிக்கல்
கல்கத்த : பம்பாய்.

ஏஜென்ற்:- தேவர் அன் கம்பனி மெயின் ஸ்ட்ரீட் கொழும்பு

பல் வைத்தியர்
எஸ். சாஸ்பத்திராஜு

லைசென்ஸ் பெற்ற பல்வைத்தியர்; கண் பரிசோதிக்கும்திறமைவாய்ந்தவர்.
3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (ரெருக்கட்டிடத்துக்குக் கிட்ட)

ஆலோசனைக்குரிய காலம் முற்பகல் 8 மணி தொடக்கம் 12 மணிவரை.

உங்கள் மூக்குக் கண்ணாடியின் ஓடிகள் அல்லது கம்பிகள் அல்லது கண்ணாடிகள் உடைந்தால், தயவுசெய்து அவற்றை மேற்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள். அவை மிகச் சரியாகவும் விரைவாகவும் திருத்திக் கொடுக்கப்படும். குறுக்ஸ் ஸ்பிரோ, சிலிண்டர் பிளேனோ, சிலிண்டர் ஆதியாம் விரும்பத்தக்க, தற்கால மாதிரிக்கேற்ற, அழகான கண்ணாடிகள் எம்மிடம் உண்டு. சாஸ்திர ரீதியான எந்தக் கண்பரிசோதனைக்குமேற்றதான கண்ணாடிகளும் உண்டு. பவுண்முலாம் கொடுத்த கண்ணாடிக் கம்பிகளும் நிக்கல் வெள்ளியாற் செய்த கம்பிகளும் மிகச் சமீபத்தில் ஐரோப்பாவிலிருந்து தருவிக்கப்பட்ட எல்லா விதமான கவின் பிரேம்களும் எம்மிடம் உண்டு.

டக்டர்கள் குறிப்பிடும் ஒவ்வொரு அம்சமும் மிக்க கவனமாகவும் திறமையாகவும் பூர்த்தி செய்யப்படும்.

எங்கள் விலைகுறைவு, நியாயமானது.

Y 19 2-5 o 1-5-41

தி மலாயன்
டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள் சீமேந்து வகைகள்
விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரூப்சைட்"
K. A. இரத்தினசிங்கம்
Y 50 3-4-39 3-3-41.

பாலர் அபிநயப் பாடல்கள்
(CHILDREN'S ACTION SONGS)
திரு. ஞா. பா. வேதநாயகம்
அவர்களால் எழுதப்பட்டு இலங்கைத் துரைத்தனக் கல்வி அதிகாரிகளால் ஒப்புக் கொள்ளப்பட்டது
(Vide Letter 17 th July, 1940)

இச்சிறு புத்தகத்தில் காணப்படும் கதைகள் வசனநடையிலும், அபிநயப் பாட்டுகளுடனும் யாவரும் சேர்ந்து பாடுவதற்கு உபயோகமாக எழுதப்பட்டிருக்கின்றன. சில பிள்ளைகள் தமிழில் ஆர்வம் கொள்வதற்காகவும் சில, மனப்பாடஞ் செய்வதற்காகவும்; சில, வேடிக்கைக்காகவும் எழுதப்பட்டிருக்கின்றன. அபிநயம் (Action) உரையாடல் (Conversation) நாடகம் (Dramas) படங்கள் (Pictures) மனப்பாடம் (Memoritor) சித்திரம் வரைதல் (Drawing) களிமண்வேலை (Clay Modelling) முதலியனவை எல்லாக் கதைகளிலும் புகுத்தப்பட்டிருக்கின்றன. பிள்ளைகளுக்கும் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கும் இப்புத்தகம் மிகவும் உபயோகமாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

சிந்தாமணி மெட்டுகளை இதில் எதிர்பார்க்கலாம்

கிடைக்குமிடங்கள்:

யூனியன் பிரஸ்,
தபால் பெட்டி 362,
கொழும்பு.

S. S. சண்முகநாதன்
அன்சன்ஸ்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

H 109 1-9-40—28-2-41

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறுளது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம்,
(ஒ) காரியாதிகாரி.
(Y. 89.C 1-11-39 to 31-10-40)

S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1941)
பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம்
மூலமும் உரையும்

பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்க்ஷை வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார் பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள் மேற்படி பரீட்சைக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதியொன்றன் விலை ரூபா 1 சதம் 10

தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

இந்துசாதனம்
20-8-40
மனேஜர்.

Borden's
THE IMPROVED
MALT
MIL
Borden's
MILK
திறமான போர்டென்ஸ்
மோல்டட்மில்க்
வெகுநேர்த்தியான பானம்
சாப்பிடுவதற்கு ருசிகரமானது
சரீரத்திற்குச் சுகமானது

இதுஒரு புதிய நூதனமுறையில் தயாரிக்கப்பட்டதும் விட்டமின் A. B. G. அடங்கியுமுள்ளது

தூக்கமின்மை சோர்வு இவைகளால் வாதைப்படுபவர்கள், தூங்கப்போவதற்கு முன், போர்டென்ஸ் மோல்டட் மில்கைச் சாப்பிட்டு விட்டுத் தூங்கச்சென்றால், யாதொரு தொந்தரவு மின்றி நன்றாய்த்தூங்கிச் சுகம் பெறலாம்.

இன்றிரவே ஒருகோப்பை தயாரித்துச் சாப்பிடுங்கள்

கலக்கவும் குடிக்கவும் மிகவும் இலேசானது

விலைகுறைந்த திறமான மோல்டட்மில்க்
பெரிய போத்தல் 1-90 சிறியபோத்தல் 1-05

Y3—3-9-40

வியாபாரத்திற்கழகு
விளம்பரம் செய்தல்

பிரபல வைத்தியாசிரியர்
யாழ்ப்பாணம் விஜயம்
பழனி மலையப்பசாமி வைத்தியசாலையின்
அதிபரும் பிரதான வைத்தியருமான
வைத்தியாசிரியர் C. P. சாமி
F. A. M. அவர்களும்
உதவி வைத்தியர்
S. கிஷ்ணன் R. I. M. P.
அவர்களும்
யாழ்ப்பாணத்திலுள்ள மேற்கண்ட தமது கிளைவைத்திய நிலையத்தில் தங்கி உள்ளார்கள்
நேரில் சந்தித்து உங்கள் நோயைப்பற்றி ஆலோசனை செய்யுங்கள்
நாடிப்பரீட்சை இனாம்!

டாக்டர் C. P. சாமி F. R. M. அவர்கள் என்னுடைய நாடியைப் பரீட்சித்து, சரியாக எமது சுகயீனத்தைக் கூறினார். அவரின் அநுபவங்கள் அவர் கூறிய பிரகாரம் குணங்களைக் கொடுத்து வந்தன. ஆகையால் அவரின் மருந்துகள் மிக்க குணமுள்ளன என்றும், எனக்கு முழுச் சுகத்தைக் கொடுத்தன என்றும் உறுதியாய்க் கூறுவேன். தடிப்பு, சொறி முதலிய தோல் சம்பந்தமான வெளிநோய்களுக்குற்ற (அம்பிர பற்பத்தின்) திறனையும், [illegible] கொடுக்கவல்ல (தங்க பற்பத்தின்) மகிமையையும் வர்ணிப்பது மிகையாகும். அவை ஆச்சரியமானவை.

S. ஆறுமுகம்,
இங்கிலீஷ் உபாத்தியாயர்.

கொக்குவில்
4—8—40

மலையப்பசாமி வைத்தியசாலை,
கிளை:- கதிரேசன்கோவிலடி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
30.7.40

Q 89 1-8-40—31-10-40

குயீன்பிரண்ட் (அரசி அடையாள) ஓடுகள்
குறைந்த விலை நிறைந்த குணம்
எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறாத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.
இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
C/o S. Veeragathipillai & Sons.
(Y. 89. B 12-8-39—11-8-40.)

பத்திரக்கிரயம்

[illegible]

தமிழ் ரூபா 5.00	இங்கிலீஷ் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00	இங்கிலீஷ் தமிழும் 12.00
தொலைதேசம் பகுதி 9.00	இங்கிலீஷ் தமிழும் 13.00

தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக
அனுப்பப்படல் வேண்டும்

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு

ஒருபக்கம் ரூபா 10.00	அரைப்பக்கம் ரூபா [illegible]
கால்பக்கம் ரூபா 4.00	ஒரு அங்குலம் ரூபா 1.00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேட விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜருடன் சேர்ந்து கண்டோ எழுத்து மூலமாகவோ ஒழுங்கு செய்யலாம். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponna, East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Thursday 3rd October 1940.